உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, ஆவணி } மலர் ௫


| | | |
|---|---|---|
| க. | தென்னாட்டுக் காட்சிகள்<br>திரு. J. M. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் B.A., B.L. | 161 |
| உ. | பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?<br>திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் | 167 |
| ௩. | சுவஸ்திக்கா<br>வித்துவான் திரு. துரூஸ் அந்தோனி அவர்கள் | 177 |
| ச. | பொருள் உறுமுறை<br>K. கோவிந்தன், ஔவைத் தமிழகம் | 183 |
| ரு. | கலைகளும் வித்தைகளும்<br>திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் B.A. (Lond.) | 186 |
| சு. | கரந்தைத் தமிழ்ச்சங்கம் 28-ஆம் ஆண்டு விழா | 195 |
| எ. | உறுப்பினர் கூட்டம் | 199 |
| அ. | மதிப்புரை | 202 |
| கூ. | நன்கொடைகள் | 203 |
| ௰. | புகையிலை வரி—அரசாங்க அறிவிப்பு (சேர்க்கை)<br>பொழிற்றொண்டர் | |


செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் யரு } பிரமாதி, ஆவணி { மலர் ரு

## தென்னாட்டுக் காட்சிகள்

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L.,

(Broadcast on 7th July '39)

தஞ்சை அழகிய ஒரு சிறு நகரம். இதனைப் பார்த்தவர்களுக்கு ஞாபகப்படுத்தவும், பாராதவர்களுக்கு அவர்கள் மனக்கண் முன் தோற்றுவிக்கவும், சில உருவங்களை இப்போது சித்தரித்துக் காட்டுவது எனது நோக்கமாகும். இந்நகரை எத்திசையினின்று அணுகினாலும், இதன் கோயில் விமானங்களும், அரண்மனை மாடமாளிகைகளும், வருவோரை அன்புடன் அழைப்பதுபோல, நீலநிறவானத்தில் கோலமொடு நிற்கின்றன. உற்று எண்ணுவார்க்கு ஒவ்வொன்றும், ஒவ்வொரு கால நாகரீகத்தை, இரகசியமாகச் சொல்வன போலவும் தோன்றும்.

நகரங்களென்றால், அவற்றை யொட்டிய பழங்கதைகளும் பலவுண்டு. தஞ்சை நகரமோ ஆதியில் செல்வத்திற் கெல்லாம் தலைவனாகிய குபேரனால் கட்டப்பட்டு அதனால் அளகை என்ற பெயரும் பெற்றுள்ளதென்பர். இவ்வளவு அழகிய நகரை அசுரர்கள் விடுவார்களா? திரிசிராப்பள்ளிக்குப் பெயர் கொடுக்க ஒரு திரிசிரன் தோன்றினான். அவன் உறவினனாகிய தஞ்சகனும் தன் பெயரையே இந்நகருக்குக் கொடுத்தான். எவரும் தஞ்சம் புகுகின்ற ஊர் தஞ்சாவூர் எனப் பெயர் பெற்றதென்றும் சிலர் கூறுவர். தான் என்ற அகங்காரம் சாகின்ற

ஊர் தஞ்சாவூர் ஆயிற்றெனவும் தத்துவக் கண் கொண்டும் கூறுவர். உண்மை எதுவென்பது ஆராய்ச்சி அறிஞர்கள் பார்ப்பார்களாக.

சரித்திர காலத்துள் புகுவோமானால் இதைப் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் ஏழாவது நூற்றாண்டிலேயே இருப்பினும், பிற்காலச் சோழஅரசுக்கு அடிகோலிய விசயாலயன், இந்நகரைப்பல்லவ-பாண்டிய சிற்றரசனாகியபெரும்பிடுகு முத்தரையனிடமிருந்து கைப்பற்றி அதனைத் தன்காதல் இல்லக் கிழத்தியை அலங்கரிப்பதுபோல அழகுற அமைத்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. அவனும், இராசராசசோழன் வரை, அவன் பின்வந்த சோழமன்னர்களும், இந்நகரையே இராசதானி யாக்கிக்கொண்டு தென்னாடாண்டாரென்ற செய்தியும் யாவரும் அறிந்ததே.

சோழன் என்ற பெயரை நினைத்த மாத்திரத்தே நம் மனக்கண் முன் தோன்றுபவன் இராசராச சோழனே. இவன் வீரத்தை நோக்கில் உலக வீரர்களில் ஒருவன். பத்தியைப் பார்த்தால் பற்றற்ற துறவிகளில் ஒருவன். மணிமுடி சூட்டிய முடியனே யெனினும் சிவனடி சூடிய செல்வத்தையே செல்வமாக மதித்து, சிவபாதசேகர னென வழங்கப் பெற்றவன். இன்னும் இராசராசனே உலக வெற்றிகளை யெல்லாம் தனதாக்கிக் கொண்டு, பின்பு உண்மையான வெற்றி ஆண்டவன் பணியில் ஈடுபடுவதேயெனக்கண்டு தன்வெற்றிக்கும், பத்திக்கும் அறிகுறியாக உலகத்திலே ஒப்பற்ற தனிப் பெருங்கோயிலை இந்நகரில் ஏழு ஆண்டிற்குள் அமைத்தான். ஆண்டவன் மேலுள்ள அவனது ஒப்பற்ற விசாலமான பத்தியை அதன் ஒவ்வொரு பாகமும் உணர்த்துவன. கோவிலுள் புகுந்த மாத்திரத்தில், மனிதன் தன் வசம் இழந்து தனது எளிமையையும், இறைவன் பெருமையையும் உணர்கின்றான். அதன் பரந்த திருச்சுற்று, அணி வகுத்த சந்நிதிகள், வானத்தை அளாவும் தென்மேருவிமானம் பார்ப்போர் மனதைக் கொள்ளை கொண்டும், பாசத்தை விலக்கும் பசுப் போன்று படுத்திருக்கும் பெரியநந்தியும், இவற்றை யாவும் உடைய எம்பெருமானின் ஒப்பற்ற மிகப்பெரிதான இலிங்கத்திருமேனியும் நம் கண்களைவிட்டு அகலாது அருள்சுரந்தும் பொலிவதைப் பார்ப்போர் உணர்வர்.

மற்றும் எப்புறம் நோக்கினும் இலிங்கங்கள், கோயிற் சுவர் மீது நடமாடும் சிறு நந்திகள், யாவும் எங்கும் சிவத்துவத்தை விளக்குவன.

இராசராசசோழன், இக்கோயிலையே தன் வாழ்க்கையின் பயனாகக்கொண்டு, உப்பு முதல் கற்பூரம் வரை ஒன்றும் குறைவு படாது, இத் தென்னாடன்றி, இலங்கையினின்றும் நல்கினான். அவன் மட்டோ. அவன் தேவியர்களும், மகளும், அவன் அக்கையும், மற்றுள்ளோரும், அவன் வழியே நின்று மனமார வேண்டுவனவெல்லாம் கொடுத்தார்கள்.

இப்பெருங்கோயிலை நினைக்குமிடத்து, இதனைக் கட்டுவித்த பின் பிரதிட்டைக்குப் பேருதவி புரிந்த சித்தர் பெருமான் கருவூரார் நினைவு வாராமல் போகாது. இவர் சந்நிதி, மேலைத் திருச்சுற்றில் வேம்பு மந்தாரை மரங்களினடியில் உள்ளது. வியாழன்தோறும் ஆயிரக்கணக்கான அன்பர்கள், வேண்டுவன வேண்டுவார்க்கு ஈவாராகிய இவரை வணங்கி இவர் அருட் பிரசாதம் பெற்று வருவது யாவரும் தெரிந்ததொன்றாம். இவரைப் பொற்கொல்லர் மரபினரென்றும், பதினெண் சித்தர்களில் ஒருவரென்றும், போகருக்கு மாணவரென்றும், மருத்துவநூல் களிலும் சித்தர்கள் நூலிலும் இவர் பெருமையைப் பலவாகக் கூறுவதி லிருந்து அக்கால அரசர்களால் போற்றப் பெற்றவ ரென்றும் தெரிகிறது. இப்பெயருடைய கருவூர்த்தேவரென்பா ரொருவரும் இக்கோயிலின் மீது திருவிசைப்பா பதிகம் இயற்றி யுள்ளார்.

இக்கோயிலுக்கு அரசர்களும், செல்வர்களுமே யல்லாது எளிய வாழ்க்கையிலுள்ள மக்களும் அன்பு பூண்டு தங்களால் இயன்ற உதவி செய்தனர். அழகி நாயகி என்னும் இடையர் குல முதியார் இக்கோயில் விமான பிரமரந்திரத் தளக்கல்லை உதவினாள் என்பர். இவ்வரிய செயலை ஆண்டவனே மெச்சி "அம்மையார் நிழலிலே யாம் அமர்கின்றோம்" என்றருளிய தாகச் சொல்லுவார்கள்.

இக்கோயிற் சிற்பி அநந்த சிவனோ, வருவது கூறவல்ல நிமித்திகன் எனவும், பிற்கால அரசாங்க மாறுதலை முன்பே உணர்ந்து, ஐரோப்பியன் தலையளவாக உருவச்சிலை ஒன்றை விமானத்தினிடை அமைத்தானெனவும் கூறுவது உண்டு.

தஞ்சைச் சித்திரங்கள் என உலகம்போற்றும் சோழர்கால ஓவியங்கள் இறைவன் சந்நிதியின் உள் சுற்றுத் திருச்சுற்றில் உள்ளன. கொலம்பஸ் என்பவரால் புது உலகம் கண்டு பிடிக் கப்பட்டது போல கோவிந்தசாமி என்னும் அண்ணாமலைப்பல் கழக ஆசிரியரால் 8-ஆண்டுகளுக்கு முன்னர்தான் இவை கண்டு

பிடிக்கப்பட்டன. இவை சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திரம், திரிபுர சங்காரம், சோழர் மக்கள் வாழ்க்கை முதலியவைகளைச் சித்தரித்துக் காட்டுவன. நாற்புறச் சுவர்களின் சில பாகங்களிலேதான் இவை இப்போது தெரிவன. மற்ற பாகங்களில் உள்ளவைகளே, அதன் மேல் தீட்டப்பெற்ற நாயக்கர் காலத்திய ஓவியங்கள் மறைத்துள்ளன. இப்போது, அவ்விருகாலத்திய இரு ஓவியங்களும் நமதுகருவூலமாக யாரும்பார்த்து மகிழ்தற்குரியனவாகும்.

சோழர்களுக்குப் பின்பு, முந்நூறு ஆண்டுகளாக இந்நகர் அரசியற் குழப்பத்தாற் சிதறுண்டும், நகரின் முதற்காப்பாகிய வல்லம் கோட்டையும், நகரும் வெவ்வேறுகப் பிரிக்கப் பட்டும், கோயிலைத்தவிர, அதன் பல திருச்சுற்றுக்களும் இடிபட்டும் போயின. கோயிலைச் சுற்றிய சிறு கோட்டை பிற்காலத்ததாகும்.

16—வது நூற்றுண்டின் இடையில் இந்நகரை மீண்டும் உயர் நிலைக்குக் கொணர்ந்த அடுத்த அரச வமிசத்தார் தஞ்சை நாயக்க மன்னர்களே. அவர்கள் நால்வரில் கருதற் குரியராவார், இரகுநாதனும், விசயராகவ நாயக்கருமாவர். இவர்களே கருநாடக சங்கீதத்திற்கும், உயர்ந்த கலைகளுக்கும், ஆந்திர வடமொழி இலக்கியங்களுக்கும் புத்துயிர் கொடுத்துத் தஞ்சாவூரை, கலைவாணியின் இருப்பிடமாகச் செய்தவர்கள்.

**சங்கீதமால்:—** இரகுநாத நாயக்கரின் சங்கீத மால் இன்னும் தஞ்சை அரண்மனையின் ஒரு பாகமாக வுள்ளது. நீண்டு உயர்ந்தமாளிகையின் பக்கங்களில்அரசனும்,தேவிகளும், மற்றுள்ளோரும் புடை சூழ்ந்து வீற்றிருக்க, தரை தாழ்ந்து நீர் நிறைந்து தடாகமாக, அதன் மேல் மிதக்கும் தெப்பத்தின் மீதிருந்து சங்கீத வல்லுநர் நரம்பு, தந்தி, வாத்தியங்களை வாசித்து இன்னிசை எழுப்பினர் என்பது உங்கள் மனக்கண்களில் தோன்றி, காதுகளையும் மனத்தையும் கவரவில்லையா?

மற்றும் இவர்கள் வீரம், கண்ணீர் சொரிந்து போற்றுதற் குரியதாகும். புறங்காட்டிஉயிர்பிழைத்தலினும்உயிர்கொடுத்துப் புகழ் பெறுதலே வாழ்வின் உறுதியெனக் கருதிய வீரர்களாவர். எதிர்பாராதவிதமாக வல்லம் கோட்டையைப் பிடித்து, தஞ்சைக் கோட்டை முன் தன் எதிரி விசுவநாத நாயக்கனின் தளகர்த்தன் அளகிரி தோன்றவே, விசயராகவன், தானும் தன் மைந்தன்

மன்னுறுவும் நேரே போர் புரிந்தும்; தங்களுக்குப் பின் தங்கள் மகளிர் மயங்கா வண்ணம், தம் தேவியர் இல்லத்தார் யாவரையும் ஒருங்கே ஓரிடம்சேர்த்து, தாம்போரில் மாயும் தருணம் ஏற்படின் ஒற்றனொருவன் தெரிவிக்க அவர்கள் இருப்பிடத்திற்கு அடியில் வைத்திருந்த வெடி மருந்தில் தீயிட்டு யாவரும் மாய்ந்து வீர சுவர்க்கம் எய்தியது சரித்திர உண்மையாகும்.

நாயக்கர்களது வீரமேயல்லாது, அவர்கள் சிறந்த பத்தியும் போற்றற்குரியதே. நகையாட்டாக தன் எதிரியைத் தோற்கடிக்க விசயராகவன் துளசித் தீர்த்தம் தெளித்தான் என்பர். பரந்தாமனின் மேலுள்ள அன்பு என்னதான் செய்யாது. அவர்கள் கட்டிய பல திருமால் கோயில்களில் இப்பொழுது பெரிதாகவிளங்கும் மன்னார்குடி இராசகோபாலன் கோயிலும், தஞ்சை மதன இராசகோபாலன் விண்ணகரும், தஞ்சை நகரை இப்பொழுது வளைத்திருக்கும் பெரிய கோட்டையும் விசயராகவன் கட்டியவே. இம்மன்னன் நாளும் தான் உணவருந்து முன் அரங்கநாதனைத் தரிசிக்க பன்னிரு நிலை மாடங்கட்டி அதன்மீதிருந்து பெருமாள்சேவை செய்த பெரியோனுமாவன். இப்போது, இதன் முதல் ஐந்து மாடங்கள் இடியால் உலைந்து போகஎழுநிலை மாடமாக எஞ்சியிருப்பது யாவரும் காணலாம்.

நாயக்கருக்குப் பின் போந்தார் மராட்டியராவர். உதவிக்கு வந்தவர்கள் ஊராளத் தொடங்கிய காலமிது. கடைசி நாயக்க வமிசம் வெடிமருந்துக் கிரையாகவே, அதனின்றும் தப்பித்தவன் விசயராகவனின் சிறு மைந்தன் செங்கமலதாசன். அவனை மறுபடியும் நாயக்கரது சிம்மாசனத்தில் வைக்க வந்தவன் எக்கோசி என்னும் பீசப்பூர் சுல்தானின் தளகர்த்தன். தான் போற்றவந்த நாயக்க அரசு இருந்த எளிமையைக் கண்ணுற்று தானே தஞ்சையின் மீது படையெடுத்துக் கைப்பற்றி மராட்டிர அரசை நிறுவிக்கொண்டான். இவ்வரசில் எக்கோசி முதல் சிவாசி ஈறாக பதினொருவர் ஆண்டாரெனினும், நினைதற்குரியர் இருவர். சாசியும் சரபோசியுமாவர். சாசி தன் காலத்தில் கலையை வளர்த்து ஞானத்திற்குப் புத்துயிர் அளித்தார். இன்னும் அவர் புகழ் திருவிசை நல்லூரில் இருந்த வித்வ சிகாமணிகளுக்கு, அவ்வூர்ப் பெயரை சாசிராசபுரம் என்று மாற்றி அவர்களுக்குத் தானமாக்கியதிலிருந்து தெரிகிறது.

சரபோசியின் பெயரும் புகழும் வான் அளாவியது. எதிர்பாராத விதமாய் அவரது 10-வது வயதில் துளசாசியால்

சுவீகாரம் எடுத்து அரசுரிமை ஏற்க நேர்ந்ததும், துளசா இறக்கவும் அவர் தம்பி அமீர்சிங்கன் சுவீகாரம் தவறெனச் செய்து தான் 11-வருடகாலம் அரசு செலுத்திய காலத்தில் சரபோசி சில வருடங்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர். ஆங்கில பரிபாலனத்திற்குள்ளாகியும், சுவார்ட் பாதிரியின் பெருமுயற்சியாலும், சரபோசி தனது உரிமையை மீண்டும் பெற்று 34 ஆண்டுகள் அரசுசெலுத்தினர். தான் அரசுரிமையினின்று நீங்கியிருந்ததன் பயனாய், மேனாட்டு நாகரீகங்களை நன்குணர்ந்து ஆங்கில இலக்கிய விஞ்ஞான சாத்திரங்களில் சிறந்தவனாக இருந்த பழைய இந்திய அரசன் சரபோசியே. அவர் புலமையும் அறிவையும் அறிந்து, சுவார்ட் முதலிய மேனாட்டுப் பெரியார்கள் வியந்து கூறியுள்ளார்கள். ஒருசமயத்திலும் வெறுப்பில்லாதவனாயிருப்பினும், சைவ சமயமே சமயமெனக் கடைப்பிடித்து அச்சமயத்திலேயே ஆழ்ந்து நின்ற இவரது பத்தி போற்றுதற்குரியது. இவரதும், இவர் வமிசத்தினரின் புகழையும் காண்பிப்பனவாக காசி முதல் தனுக்கோடி வரை நிற்கும் அறச்சாலைகளும் மானியங்களும், பலவாம். இவரால் பெருக்கப்பட்ட தஞ்சை சரசுவதி மால் புத்தக நிலையம் உலகத்திலேயே சிறந்ததாகும். காசியாத்திரை சென்று திரும்பியதும், அரண்மனையின் ஒருபாகத்தை எழுநிலை மாடமாகக் கட்டியதும் தம் இராணியாருக்கு சமுத்திரம் எவ்வாறு இருக்கும் என்று காண்பிக்க 4-மைல் பரப்புள்ள சமுத்திரம் ஏரியை உண்டாக்கியதும் இவரது இன்ப உணர்ச்சியை வெளிப்படுத்தும். மருத்துவ நூலைத் தக்க முறையில் செம்மைப்படுத்த "தன்வந்திரி மால்" என்ற மருத்துவ அவையைக் கட்டிப் பல மருந்துகளையும், முறைகளையும் செய்து வைத்திருந்தார். 1822-ல் இவர் இறக்கவும், தஞ்சை நகரும் தன் பெருவாழ்வை இழந்ததென்றே சொல்லலாம். மக்களுடைய மனம் மகிழ்வு பெருமையால், ஆறுதல் அடையவில்லை யென்றே சொல்ல வேண்டும்.

இராசராசனுக்குப் பிறகு, தஞ்சைக்குப் புத்துயிர் கொடுத்தவன் சரபோசியே. பெரிய கோயிலினிடத்து பற்றுமிக்கோனும் இவனேயாவன். சோழனைப்பற்றிய இராசராசேச்சுவர நாடகம் ஒன்றிருந்து வைகாசி விழா தோறும், கோயிலில் நடிக்கப் பெற்று வந்தது. அது பல நூற்றாண்டுகளுக்கிடையே மறைந்தது. சரபோசியின் நினைவாக சரபேந்திர பூபால குறவஞ்சி நாட்டியம் அவன்காலமுதல் இப்போதும்

நடைபெற்றுவருவது யாவரும் கண்டு களிப்பதாகும். இதில் குறைந்தது நடனமாதர் எண்மர் குறவஞ்சிப் பாட்டுக்களை தகுந்த இராகங்களில் பாடி ஆடுகிறவர்கள் திறமைக்குத் தக்கபடி நடித்து மகிழ்விக்கின்றனர். இக்கூத்து சரபோசி மன்னன்மீது மையலுற்ற மங்கை மோகினியின் காதல் நிகழ்ச்சியைக் கூறுவது. மோகினி தன் காதலைத் தன் தோழிகளுக்கு பல நுட்பமும், திறமையும், அழகும், இனிமையும் மேம்பட நடித்துக் காட்டுகிருள். அப்போது குறத்தி ஒருத்தி குறி சொல்லுதற்கு வர, மோகினி தன் கையைக்காட்டி, தன் காதல் நிறைவுறுமெனக் கேட்டு இன்புறுகின்ருள். தஞ்சை நகரில் ஆண்டு தோறும் நிகழும் நிகழ்ச்சிகளில் இதுவொன்று பாராட்டுதற் குரிய தென்னலாம்.

மற்றும் கடைசி சிவாசி மன்னனுக்குப் பிறகு அவருடைய இராணிகளின் நினைவே எண்ணுதற் குரியதாகும். அவர்கள் இந்நகருக்குச் செய்த பணிகள் பல. பல கோயில்களைப் புதியவாக்கிய பண்பும், அவற்றின் விழாக்களைச் சிறப்புறச் செய்தமையும் அவர்களதே. அவர்கள் வாழ்ந்துவந்த காலம் வரை தஞ்சையில் ஒரு தனி அரசு இருந்து வந்தது என்ற நினைவும் மக்களுக்கு இருந்தது.

## பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?

திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழியாசிரியர், போர்டு உயர்கலாசாலை, திருவையாறு.

(முற்ருெடர்ச்சி துணர் 15, மலர் 4, பக்கம் 157)

3. பிதாமஹவச: ஸ்ருத்வா விநிஸ்சித்ய மஹாமதி: I
விவேஸ வைஷ்ணவம் தேஜ: ஸஸரீர: ஸஹாநுஜ: I

உத்தர. ச. 110. சு. 12

(பொருள் :—)பேரறிஞராகிய பெருமாள், நாமகள்கேள்வர் நவின்ற நல்லுரை கேட்டபின், தம் திருமேனி தன்னெடும், உடன் பிறந்தார் தம்மொடும் திருமாலவரின் பெருமொளி புக்கார். (மாந்தராம் தன்மையொழித்து முற்றுணர்வுடைய திருமாலின் தன்மையைப்பெற்ருர் என்பது கருத்து.)

இது, நான்முடிப் புத்தேள் 'காலன்' என்னும் கடவுள் வாயிலாக இராமபிரான் இவ்வுலகத்தியற்றவேண்டிய வினைமுற்றிய படியால் நாளும் முற்றிற்று என்று அவர்க்குச் சொல்லியனுப்பிய செய்தியைக் குறிப்பது.

இனி, கற்புக்கடம்பூண்ட பொற்புடை மகளிர்க்குக் கணவனை யகலாதடிமை செய்திருத்தலே யழகாமாதலினாலும், பெருமாளினும் பிராட்டியாந் தமக்குப் பிறந்துழலும் உயிர்கண் மாட்டுப் பேரருள் உண்டாமாகையாலும், உயிர்களையுய்விப்பான் உயர்திருமால்பால் ஓம்படுக்கும் ஒரு பெருங்கடவுளாமாதலினாலும், பெரியபிராட்டியும் இவ்வுலகிற் பிறத்தன்மேயினாரென்க.

இனி, இராவணன் பிறத்தற்கு முதலாவன வருமாறு:—

மலரவனாரின் மாண்புடை நெஞ்சத்துத் தோன்றிய 'சனகர்' முதலிய நால்வரும், பிள்ளைநிலையிலேயே பெருந் துறவியராயினர். அவர்கள் மூவா முதல்வர் ஒரு மூவரையும் அவ்வவரிடங்களின் நேரே நடந்து காட்சிபெறலே கடனாவதென்று கண்டு வருவர்.

ஒருகால் அவர்கள் திருமாலைக் காண்பான் திருநாட்டுக் கெழுந்தருளினர். அதுபோது, பெருமாள் தன் திருவுளத்திற் கிணங்கக் கடைகாக்கும் இரட்டையர் 'சயவிசயர்' என்பார் தம் தெள்ளிய உளமும் திரிதலுற்றது. அதனால், அவர்கள் பிள்ளைத்துறவர் நால்வரையும் உள்ளேசெல்ல மறுத்தனர். பின்னும் பிரம்படி நிரம்பவும் தந்தனர். 'குணமென்னும் குன்றேறிநின்ற' அவ்வந்தணரும் ஓர் நொடிசினந்து, "மயர்விலார்மன்னியுறையும் உயர்வுடையிவ் வீட்டுலகில், துயர்தரும் தீப்பண்புடன் நீவிர் உறைதல் தக்கதன்று. இன்னே அவுணர் தன்மை அடைகுதிர்" என ஓர் தெறுமொழி சொற்றனர். பிழைத்த துணர்ந்த இருவரும் பிழைபொறுக்க வேண்டினர். அரவணைச் செல்வனும் அறியார்போல் ஆண்டடைந்து நடந்தது தெரிந்தார். வீடெய்தியார்க்கு வசைமொழியாதும் கேடுசெய்யாதாயினும் துறவோர்பெருமை தொலையாமைவேண்டி, அவ்வடுமொழிக்கு அவ்விரட்டையரை உடம் படுத்தினார். மேலும், முப்பிறப்பெய்தவும், தமக்கு நேர் எதிரியாயிருக்கவும், தம்மால் முடிவெய்தவும் திட்டம் செய்தார்.

இவ்விருவருமே, முதற்பிறப்பில் இரணியன் இரணியாக்கனாகவும், இரண்டாவதில் இராவண கும்பகன்னனாகவும், மூன்றாவதாகிய இறுதிப் பிறப்பில், தந்தவக்கிர சிசுபாலராகவும் தோன்றித் தம் தீவினை தீர்த்தனர் என்ப.

இவ்வாறாக, வீட்டு நெறிபற்றியிருந்த சயவிசயரே—திருமாலுக்கு அணுக்கத் தொண்டராயிருந்த இருவரே—தம் இரண்டாம் பிறப்பில் இராவண கும்பகன்னராகப் பிறந்தனர் என்ற இச்செய்தி பாகவதம்முதலிய நூல்களிற் பரக்க விரித்துரைக்கப் படுகின்றது.

இனி, வீட்டு நெறிபற்றி யார்க்கும், வெகுளி, மயக்கம் முதலிய *இருட்பண்பின் பெருக்கம் எய்தல் பொருந்துமோ வெனிற் கூறுவன்.

திருமால், தாமும் தம் அடியவரும் வீட்டின்பம் நுகருமாற்றையும், அவ்வடியவர் போன்ற பிறவுயிரெல்லாம் அஃதுறாமல் வாழ்க்கைச்சுழியில் வீழ்ந்தலமரலையும் நோக்கி நோக்கிக் கவன்று, நான்மறை முதலிய அறநூல்களை வெளிப்படப்பரப்பியும், அவற்றின் உண்மைப்பொருளை உணரமாட்டாது, அவ்வுயிர்கள், தம் உடலுறுப்புக்களைச் சிற்றின்பம் வெஃகி, அத்துறையிற்செலுத்தி அல்லலுழுவாராக,மானைக்காட்டி மான்பிடிப்பார் போன்று, தம்மடியவரை அத்தளைபட்டாரிடைத் தோற்றுவித்து நல்வழிகாட்டியும், தாமும்பிறந்து தமது இன்னுரைக்காலும் நன்னடையாலும் அறம் கடைப்பிடிக்குமா செய்தும் வீட்டுலகம் காட்டலாயினர் என்பர்.

உடன்பாட்டு நெறியான் உயர்நெறிகாட்டும் ஆழ்வார் முதலிய அடியவர் போலாது, எதிர்மறை நெறியான் அல்லா நெறிகாட்டிப் பொல்லாங்கைத் தவிர்க்கும் பெற்றியராய்ப் பிறந்தனர் இரணியன், இராவணன் முதலியோர் என்க.

மாலவர் தமக்கு நேர்எதிராகிற்குந் தன்மையுடைமை வெறும்மாந்தர் முதலோர்க் கேலாதாதலின், தமக்கு ஈடு கொடுக்கவல்ல வீடு பெற்றாரையே இராவணன் முதலிய பிறப்புடனனுப்புதல் அவர்க்கு ஏற்றதாயிற்று. ஆழ்வாரும் இராவணன் முதலோரும், வினைவகையாற் றம்முண் மாறுபடுவோராயினும், பயன் வகையால் ஒரு பெற்றியரே ஆதலின் பெருமாளுக்கு இவ்விருதிறத்தாரும் ஏற்றத்தாழ்விலாது ஒருபடித்தாய் வேண்டியவர்தாமென்க.

இத்தன்மை நோக்கின், இராவணன் முதலோர் என் போன்றாரால் இறைஞ்சியேத்தப் பெறுந்தன்மை யுடையவரே யாவர்.

---

* இருட்பண்பு=தமோகுணம்.

தமக்காகும் நெறிபற்றும் ஆழ்வார் முதலோர்க்கு ஒரு குறைவும் காட்டாமல், ஆகாநெறிகாட்டும் சயவிசயர்க்கு இழிபிறப்பை எய்துவித்தற்கடியாகவே, சனகர் முதலோர் வசைமொழிகாட்டி, அது பெறத்தகுவாராக அன்னார் உள்ளங்களைத் திரித்தருளினர் திருமால். உயிர்களின் உள்ளங்களைத் தம்திருவிருப்பிற்கிசைய மாற்றும் ஆற்றலுடையார் என்பது குறித்தற் பொருட்டே நெடியோற்கு 'இருடிகேசர்' * என்னும் திருப்பெயரும் திகழ்வதாயிற்று. இவ்வளவும் கூறியவாற்றல் பெருமாள், பிராட்டி, இராவணன் முதலியோர் பிறப்பிற்கு அடியாவன இன்னவென ஒருவாற்றான் விளங்குவனவாகும்.

இனி, எடுத்தபொருளைத் தொடுத்து முடிப்பல். பொன்மான் புணர்ப்பினல் இளையபெருமாளும் ஏகியகன்றபின், தனித்திருந்த பிராட்டிபாற் றுறவின் ஒப்பனையிற் சென்ற இராவணன் சின்னேரம் தன்பெருமைபற்றி யுரையாடல் புரிந்தபின் தன் மெய்த்தோற்றம்கொண்டு, பிராட்டியை மருட்டினன். 'அடாதுசெய்வர் படாதுபடுவார்' என அதட்டிக்கூறும் பிராட்டியை, இவன் தன் இடக்கையொன்றாற் கூந்தற்கற்றையையும்,வலக்கையாலிரு தொடைகள் தம்மையும்பற்றியெடுத்தும் பிராட்டியின் பிறவுறுப்பெவற்றிலும் தன் பிறவுறுப்புத் தீண்டா வகையாத் தேர்மேலிட்டான். சடாயுவொடு போர் நேர்ந்து, தேரிழந்து, நிலமேலிழியும்போதும் இவ்வண்ணமே நிகழ்த்தப்பட்டது. பின், தேரொழியத்தானே பிராட்டியை எடுத்து விண்வழிச் சென்றபோதும் இப்படியே தீண்டப்பட்டது. பெண்டிரை அவர் விருப்பின்றித் தீண்டின்சாவுண்டாக வென முன் இட்ட வசைமொழி உன்னியே இலங்கை மன்னன் பிராட்டியைப் பிறவுறுப்புக்களில் தொட்டிலன் என்பர்.

வான்மீகியார், இராவணன் பிராட்டியைப்பற்றியெடுக்கும் பான்மையைச் சொல்லுமிட மெல்லாம் வைத்து ஆராயின், இன்ன இன்ன இடங்களிற் பற்றினல் வசைமொழிகள் யாதும் செய்யா என்பதை இவன் அறிந்திருந்தான் என்று சொல்ல இடந்தருகின்றது.

இங்ஙனம், தொடாமையால் வசைமொழி பயனுறுத்தவில்லை யென்பதும், தொட்டமையால் இலங்கைமன்னன் தான் வேருடன் அழியும் தீங்கினைத் தேடிக்கொண்டானென்பதுமாகக்

* இச்சொல்லுக்கு, ஐம்பொறிகளையும் அடக்கியாள்பவர் என்பது பொருள்

கவர்படக் கூறலால் "மயங்கவைத்தல்" என்னும் நூற்குற்றம் நேர்ந்து, பாவலர் நாவலராற் பழிக்கப்படு மென்பது ஓர்ந்தே தானே! அன்றிச் சேற்றினிற் காலை விடவும்வேண்டா, விட்டெடுத்துப் பின் அலம்பவும் வேண்டா என்னும் கொள்கையால் தானே! கம்பநாட்டாழ்வார் தம் மிராமாயணத்து, மேற்சொல்லிய குற்றந் தோன்றாமல், "உலகமலையாமை" என்னும் அழகுதோன்றப் "பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி" என்றபடி வழிநூல் செய்வார்க்குரிய வழக்கினைப்பற்றி, இராவணன் பிராட்டியைத் தீண்டாமலே குடிலுடன் பேர்த்து வைத்திட்டான் எனமாற்றி யமைத்திட்டார். ஓரிடத்துக் கூறியதோடமையாது வேண்டுமிடமெல்லாம் தாஅனுட்டித் தனது நிறுப்பெனும் மதம்பற்றி அதனை அடிக்கடி வலியுறுத்திப் போந்தார் அவ்வானுயர் கம்பனார்.

ஆழ்வார் மாற்றிக் கூறியவண்ணம் வருமாறு:—

ஆண் டாயிடை தீயவ னுயிழையைத்
தீண்டானெனு மேலுரை சிந்தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலம்யோசனை கீழொடு மேல்

கொண்டா னுயர்தேர் மிசைகோல் வளையாள்
கண்டா டனதாருயிர் கண்டிலளால்
மண்டானுறு மின்னின் மயங்கினளால்
விண்டான் வழியா வெழுவான் விரைவான்.

(ஆரணியகாண்டம்சடாயுவுயிர் நீத்தபடலம்—செய்யுள் 74, 75)

(பொருள் :-) 1. அங்கு, அப்போ, தீவினைகன்றியவிராவணன், ஆராய்ந்தணிந்த அணிகளையுடைய ஓர் பெண்பாலை (அவள் விருப்பின்றித் தீண்டலாகா தென்னும் பழைய வைதன் மொழிகளைத் தன்னகத்திற்கொண்டு, (திண்மையால்) தூண்களே என்று சொல்லலாம்படி நிமிர்ந்த தோள்களின் வலிமை கொண்டு (பிராட்டி யிருந்த குடிலின்கீழ்) நிலத்தை மேலும் கீழும் எட்டுநாழிகைவழி (யோசனை) அளவினதாகப் பேர்த்தெடுத்தான்.

2. (பேர்த்தெடுத்ததும்) வானளாவிய தேரின் மேல் ஏற்றிக் கொண்டான். (தான் தேர்மீ தேற்றப் பட்டதை) பிராட்டியார் கண்டார். (உயிரிற் 'சிறந்தன்று நாணே, நாணிற்

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' ஆதலின் தன் கற்பெனும் பண்பு கெடுமோ! எனுமச்சத்தால்) தம்முயிர் உடல் விட்டுப் போனதும் போகாததுமாய், நிலத்தைப் பொருந்தி மின்னும் கொடி மின்னலைப்போல் துடித்து உணர்விழந்தார். அவ்வளவில், இராவணன் வான்வழியாகத் தேரை விரைவில் எழுப்பிக்கொண்டு ஏகுவானாயினான் என்றவாறு.

'ஆருயிர் கண்டிலள்' என்பதற்குத் தமது அரிய உயிருக் குயிராகிய இராமபிரானை (இக்கேட்டிற் காக்கும்படி கிட்டியிருக்கக்) கண்டாரில்லை எனும் பொருளுரைக்கினுமாம்.

இங்ஙனம், கம்பர் முதனூலிலுள்ளதைத் திரித்துப் பொய்யாகக் கூறலாமோவெனின், 'நன்று சொன்னாய், இவர் நல்லிசைப் புலவராதலிற் பொய்கூறார். மற்று, இவர் கூறியதன்னதோர் நிகழ்ச்சிப் பிறிதொரு பேரூழியின்கண் (கற்பத்தில்) நிகழ்ந்திருக்கவேண்டும்' எனக் கூறுவர் ஒருசாரார்.

தமிழர்தம் உள்ளநிலைக்கு ஓர் அரிவையைப் பிறஆடவன் ஒருவன் காதலால் தொட்டவிடத்துக் கற்புக் கெடாதுநிற்கும் என்பது உவப்பாகாதாதலான், அங்ஙனம் திரித்துக் கூறினர் என்பர் மற்றொருசாரார். இதற்குத் தமிழர்கள் மாதர்க்குரிய கற்பொழுக்கம் எத்தகைய பொற்புடையதாய் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றனர் என்னும் குறிக்கோள் ஈண்டு ஆராயப்படவேண்டும்.

"கற்புடை மாதர் பிறர் நெஞ்சு புகார்" என்பதே அவர் விரும்பும் அவ்வுயரிய குறிக்கோள் என்பதாகத் தமிழ் நூல்களின் வாயிலாகப் புலப்படுகிறது. மாதர் கற்புடையராயின், அவர்கள் தம்மட்டில் பிறஆடவரை நெஞ்சாலும் காதலுடன் கருதாதிருத்தல் மட்டுமின்று, பின்னை, பிற ஆடவர் தாமும் தம்மைக் காதலுடன் கருதவுமாகாது; அங்ஙனம் அவர்கருதின் அது கற்பிலை என்பதே. இத்தகையதாய் முடிந்த எல்லையின் இலங்கும் கற்பு எவர்க்கும் எய்தற்கரியதே! எளியேன் இக் குறிக்கோளுக்கோர் குறைபாடாகத் தமிழ்நூல்களில் ஏதாவது ஓர் இடுக்கும் கிடைக்குமோ! என்று துருவிவருங்கால் ஓர் ஓட்டையும் அகப்பட்டது. அது, சிலப்பதிகாரமெனச் சிறந்துயர் நூலுள் மறக்கற்பின் திறன்மிக்க மாண்டகு கண்ணகியாள், தலைக் கற்புடைய பெருங்கோப் பெண்டுக்கு—மதுரைப் பாண்டியன் மனைவிக்கு—தான் வதிந்த பூம்புகாரில் மேம்பட வாழ்ந்த கற்புடை நல்லாரெழுவரின் நற்பெருவரலாற்றை

நவிலுங்கால் இயலுகின்றது. அப்பகுதியை இளங்கோவடிகள் இயற்றிய வண்ணமே காட்டுகின்றேன். அது,

"... ... ... ... வேற்றொருவ
னீணோக்கங்கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுகமா கென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணியல்குற் பூம் பாவை ... ..." என்பது.

இதில், 'வேற்றொருவன் நீணோக்கங்கண்டு' என்பதாற் பெறப்படும் பொருள் யாது? கணவனல்லாத பிற ஆடவன், தன்னைக் காதலால் (வெறித்து) விடாமல் நோக்கும் நோக்கின் குறிப்பினைக்கண்டு 'குரக்குமுகமா கென்றல் என்பதுதாமே? இங்கு, இப்பூம்பாவை பிறன் நெஞ்சு புகுந்தனளா? அல்லளா? அதனாற் கற்பிழந்தாளாகக் கருதப்பட்டாளோ? இல்லவே யில்லை. கருத்திற் பெரிய பெரியோரால், அவருளும் கண்ணகியால், விழுத்தகு முழுக்கற்புடையளாகவே விளக்கப்பட்டுளாள். இதனால் பிறர் நெஞ்சு புகுதல் ஒன்றாலேயே காரிகையார் கற்பிழந்தாரென்று கொள்ளும் கொள்கை கடிந்தொதுக்கப்படு மென்றே கருதுக. இதனையே பிராட்டிக்கும் பாராட்டிக் கொள்க.

ஆயின், மேற்காட்டிய 'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்' என்ற மேலோர்மொழி தள்ளத் தகுவதொன்றென்று தமியேன் கருதுவதாகத் தமிழ் நல்லன்பர்கள் தங்கள் திருவுளத்திற் கருதலாகாது. 'மகம்மதுவை நோக்கி மலை பெயர்ந்து வாராதாயின், மகம்மதுவே மலையை நோக்கிவிரைதல் வேண்டும்' என்னும் வழக்கிற்போல, மேலோர்மொழியை நோக்கிச் சான்றோர் ஒழுகலாறு நிகழாதாயின், சான்றோர் ஒழுகலாறு நோக்கி மேலோர்மொழி நிகழவேண்டுவதுதான். 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம்' இயம்ப லன்றே இயலுடைத்தாவது. ஈண்டு மேலோர் மொழி சான்றோர் நடைக்கொத்து இயங்கலாவது, ஏற்றபெற்றிப்பொருளை மாற்றுவதுதான். அது, 'பிறர்' என்னும் சொற்கு யாரும் எவரும் என்னும் அத்துணை விரிந்தபொருள் கொள்ளாது சிலரை விலக்கல் செய்தல் தக்கது. இது உரையிற் கோடல் என்னும் 'உத்தி'யின்பாற் படுமாதலால் புரையாகாது. நெஞ்சுபுகுதலுக்குக் 'காதல்பற்றி, என்றுபொருந்தும்பொருளை இசையெச்சமாகக் கொள்கின்றிலமோ? அது போலத் தான். 'பிறர்' என்பது 'உலகமென்பது உயர்ந்தார் மேற்றே' என் புழிப்போலக் கன்றுந் தீவினையாற் பொன்றுந் தகவுடைய

மாக்களையன்றி, நல்வினை நாடும் நன்மக்களையே குறிப்பதாகக் கொள்ளல்வேண்டும். ஆகவே, மேற்கூறிய பூம்பாவை பிறன் நெஞ்சு புக்கதற்கு முதலாயது அன்னனது கன்றிய தீவினை யொழுக்கமேயன்றிப் பிறிதின்று என்று ஓர்தல்வேண்டும். மற்று, இப்பெண்ணு ரணங்கின் திண்ணர் கற்பின் குறைவாமெனக் கொள்ளலே கூடாது.

பிராட்டியார் தாமும் இராவணன் முதலோர் தேறுநெஞ்சுள் ஏறப்புக்கது தம்குறைபடு கற்பினலன்று, மற்றவர் மாளும் தொழில்படவுற்ற தீயூழின் கொடும் பயனென்றே கோடல் வேண்டும்.

இங்ஙனம் கூறிய இதனைத் தமிழர் எய்தியதன்மேற் சிறப்பாகக் கொள்வரேயன்றிப் பொதுநிலையில், எவ்வாற்றானும் எவர் நெஞ்சுபுகுதலையும் ஒவ்வாமையே நற்கொள்கையாக ஒப்புவர் என்க. ஆதலால், தமிழர் குறிக்கோள் கருதியே திரித்தார் கம்பரெனின் அது முற்றும் பொருந்துவதாயில்லை என்பதே தேற்றமாம்.

இதில் எளியேற்குப் புலப்படுவது யாதெனின், கம்பநாட்டாழ்வார் தமக்குப் பின்னர் எய்தும் 'ஆழ்வார்' என்னும் சிறப்புப் பெயருக்கேற்பப் பிராட்டிபாற் பேரடிமை பூண்டபெற்றிய ராதலின், தாம் தொழும் கடவுளராம் அன்னரை ஒருவன் தொட்டான் என்பதைத் தம் வாயாற் கூறற்கும் ஒருப்பட்டிலராய்த் தம் அன்பினை வெளிப்படுத்தினர் என்பதே. இவர் நாட்டிய இக்கொள்கை புரைதீர்ந்த நன்மை பயப்பதாய், இன்றளவும் எல்லாராலும் விரும்பி ஏற்கப்படுவதால், இப் பொய்ம்மையும் வாய்மை யிடத்ததாய் வழுவிலசாயிற்று. தமிழரின் உளநிலை ஒன்றையே கருதிக் கம்பர் திரித்துரைப்பதாயின், இராவணன் பிராட்டிபாற் காதல் கொண்டதாகவே கூறல் கூடாது. அங்ஙனமாயின் இராமாயணமேது? ஆதலால், ஆழ்வார்க்கு முடிந்த கருத்து அஃதன்றெனவே தோன்றுகின்றது.

இனி, ஒப்புமையாயிற் செப்பினை குற்றம் (Comparisons are invidious) எனக் காந்தியடிகளார் கழறுதற் கேற்ப, இச்செய்தி கூறிய திறம்பற்றிக் கம்பர்க்கும் வான்மீகியார்க்கும் உள்ள ஏற்றத் தாழ்வினை யாராயின், அவ்விருவருள் ஒருவரைக் குற்றப் படுத்துவதாகவன்றோ முடியும். கம்பர் 'மயங்க வைத்தல்' இன்றியும் 'உலகமலையாமை' தோன்றவும் பாடினர் எனில்,

வான்மீகனுர் அக்குற்றம் தோன்றவும் அவ்வழகு தோன்றுமனும் பாடினுரென்றன்றே கொள்ளப்படும்! அம்மம்ம! இத்துறையில் யான் இழிந்திருத்தலாகாது. கம்பர், காளிதாசர் முதலிய பென்னம் பெரும் புலவரெலாம் இவரை 'முதற்புலவர்' (ஆதி கவி) எனப் போற்றிப் புகழ்தலை யான் கேட்டறியேனே! 'ஒருபானை சோற்றுக்கோர் அவிழ்பதன்' போலக் கம்பநாடர், இப்புலவர்பெருமானின் புலமையை விளக்கற்கு ஓர் எடுத்துக் காட்டினைத் தம் நூலுள் எடுத்தாண்டிருப்பதை இங்குக் காட்டினுல் போதும், அது,

> நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை !
> வய்த வைவின் மராமர மேழ்தொளை
> எய்த வெய்தவர்க் கெய்திய மாக்கதை
> செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே

என்ற பாவால் விளங்கும். 'வைதவை வெ'ன்பது, ஓர்வேடன் இணைவிழைச்சிலிருந்த இருகுருகுகளுள் ஒன்றை எய்து கொன்ற போது, பறவைபால் இரக்கமிக, அவனை வசையமையப்பாடியதைக் குறிப்பது. பொதுவாக நோக்குமிடத்து யாராவது எவரையாவது வையும்போது சினமிகுதியால், அறிவாராய்ச்சியில்லாமலே கூற்றுநிகழும். குற்றம் குறை அதில் ஆராயக் கூடாது. உலகவழக்கச் சொற்களாகிய சிதைந்த சொற்களாய்ச் சொல்லியல் பொருந்தாமல் பிழை மலிந்திருக்கக் கூடும். ஆனுல், வான்மீகியார் திட்டிய திட்டோ, வெறும் உரைநடையாலியங்காமல், புலவர்போற்றும் பாட்டாய் இயன்றது. அம்மட்டோ! இராமபிரான் ஓர் அம்பால் ஏழுமரங்களையும் ஒரே முறையில் தொளைத்தருளியது போல, இவரும் ஒரு பாட்டுள் இராமயணத்து எழுபிரிவின் பொரு ளவ்வளவையும் உள்ளடக்கி, ஆராய ஆராய மிக ஆழமுடையதாய்த் திட்ப நுட்பஞ் செறியச் செய்திருக்கின்றுர்.

இவ்வளவு சிறப்பியல்புகளையுடைய இவர் குற்றம்பட நூல் யாத்திலரேல், பின்னை, இவர் கம்பர்போற் கூறுமைக்கு என்ன அமைதி கூறலாம் எனின், இவர் ஓரிடத்துக் கிடக்கும் இப் பொருளை ஆங்காங்கு பிற பொருள்களின் வாயிலாக நுணுக்கமாகப் பெற வைத்து முடிக்கின்றுராதலின், இஃது 'உய்த்துணரவைப்பு' எனும் உத்தியின்பாற் பட்டுக் குற்றமிலதாமென்க.

மேலும், நாமகள் கேள்வர் வான்மீகியார்க்கு இராமபிரானுடைய வரலாறுகள் யாவும் நடந்தது நடந்தபடியே புலப்படும் எனவும், அவற்றை அப்படியே பாடுக எனவும் ஈகைமொழி யருளியிருத்தலால், தொட்டதாகப் பாடின் குற்றம் வாராதாதலாலும் தாமும் மெய்யுணர்வுடைமையாற் செய் தீவினையை மாய்த்து விடலாமாகலாலும் அங்ஙனமே கூறினார் என்க.

இனி, வான்மீகியார் பாட்டுக்களைக் கொண்டு, இராவணன் பிராட்டியைப் பற்றிய பான்மை எத்தகைத் தென்பதையும், அதன் விளைவுகளையும் நன்காராயப் புகவேண்டும்.

1, இத்யுக்த்வா மை$^{2}$திலீம் வாக்யம் ப்ரியார்ஹாம் ப்ரியவாதினீம்।
அ$^{4}$பிக$^{3}$ம்ய ஸுது$^{3}$ஷ்டாத்மா ராக்ஷஸ: காலசோ$^{3}$தித:।
ஜ$^{3}$க்ரர்ஹ ராவண: ஸீதாம்$^{3}$புத$^{4}$: கே$^{2}$ரோஹிணீமிவ||

2. வாமேன் ஸீதாம் ப$^{3}$த்மாக்ஷீம் மூர்த$^{4}$ஜேஷு கரேணஸ:।
ஊர்வோஸ்து த$^{3}$க்ஷிணேனைவ பரிஜ$^{3}$க்ராஹ பாணினா||

3. தஸ்தாம் பருஷைர்வாக்யைர் ப$^{4}$ர்த்ஸயன்ஸ மஹாஸ்வன:।
அங்கேனாத$^{3}$ாய வைதேஹீம் ரத$^{2}$மாரோபயத்தத$^{3}$ா ||

(பொருள்:—) 1. அறக்கொடிய நெஞ்சின் அரக்கனான இராவணன் பிராட்டியை நோக்கி இச்சொல்லைக் கூறிவிட்டு, இன்மொழி பகர்வாரும், இனிமைக்கே தக்காருமாகிய அச்சீதா பிராட்டியாரை, ஊழால் தூண்டப் பட்டு அணுகிச் சென்று, விண்ணில் விளங்கும் உரோகிணியைப் புதன் சென்று பற்றினாற்போலப் பற்றினான்.

2. அவ்விராவணன் தாமரையிதழ் புரையுங் காமர் திருக்கண்களையுடைய அப்பிராட்டியாரை இடக்கை யொன்றால் இளமென் கூந்தற் கற்றையினும், வலக்கை யொன்றால் வயங்குமிரு தொடைகளினும் பற்றலுற்றான்.

3. பின்னர், அவன், அப்போது, பிராட்டியாரைப் பெருங் குரற்பாய்ச்சிக் கொடுஞ் சொற்களால் அதட்டிக் கொண்டே, தொடைபற்றித் தேரினிடைக் கொணர்ந்து ஏற்றினான்.

இம்மூன்று செய்யுளாலும் இலங்கைக்கோன் பிராட்டியைக் கூந்தலினும், தொடைகளினும் தொட்டெடுத்துப்போய்த் தேரில் வைத்தமை புலனாம். முதற்செய்யுளில், 'விண்ணில் விளங்கும் உரோகிணியைப் புதன் சென்று பற்றியதுபோல்'

என்றுகூறிய ஒப்புமை மிகவும் ஆராய்ந்து மகிழ்தற்பாலது. உரோகிணி திங்களஞ் செல்வற்கு உரிய நன் மனைவி யாவாள். புதனோ, அம்மதிக்கு வியாழக்கடவுளின் மனைவி தாரை யென்பாள்பால் கூடாவொழுக்கத்தாற் பிறந்தவனுவான். நிறைமதி தன் அறிவிழந்து, தாயை நிகர்க்கும் ஆசான் மனைவியைப் புணர்ந்தனனாக, அவன் மகன் புதனுக்கும் 'மகனறிவு தந்தையறிவு' என்ற ஆன்றோர் உரைக்கேற்ப, தன்தாயைப் பற்றும் பெற்றி நேர்தல் தகாத தொன்றன்றே? அதுபோலவே, இராவணனும் தன் தாயை நிகர்க்கும் தலைமைவாய்ந்த பிராட்டியைப் பற்றினன் என்க, அரக்கர்தம் பிறப்பிற் பிறந்துள்ளமையாலும், ஊழ்வினையால் அவனுள்ளம் குலைந்ததாலும், அவற்குத் தீய நினைவே திண்ணிதின் மூள்வதாயிற்று என்பது. இவ்வொப்புமையால், புலவர், இராவணனுக்குப் பிராட்டி தாய்முறை யாவார் என்பதைக் குறிப்பிட்டு, அதன் வாயிலாக அவனது சயவிசயருள் ஒருவனாகிய அவனது முற்பிறப்பையும் குறிப்பாகச் சுட்டினராயிற்று.

(தொடரும்.)

# சுவஸ்திக்கா

வித்துவான் திரு. துநஸ் அந்தோனி அவர்கள்
St. ஜோசப் உயர்தரக் கலாசாலை, திருச்சிராப்பள்ளி

திராவிடப் பெருமை திகழ்ந்தழிந்த பாரத நாட்டின் திரண்ட சரிதம், பண்போடு பகரப்படாவிடினும், பழங்கால இலக்கியங்களாலும் கல்வெட்டுக்களாலும் கரைந்திடிந் தழிந்த கவினுறு கட்டிடங்களாலும், அதன் சரிதம் ஒருவாறு தொடர்ச்சியாய்க் கூறப்பட்டுள்ளது. சில வாண்டுகளுக்கு முன்றோன்றிய சரித வல்லுநர், அவர்கள் காலத்திற் கிடைத்த சான்றுகளைக் கொண்டோ, ஐயப்பாடுற்றோ, இந்தியா ஆரியரால் நாகரீகப் படுத்தப்பட்டது என்றும், ஆரியமே இந்தியா வென்றும் சொல்லிப் போந்தது மல்லாமல், திராவிடப் பெருமக்களின் திறனுற்ற நாகரீக நிலையை ஆயாது, மிலேச்சர் என்று அறியாமையால் அறைந்தேகினர். ஆனல் உண்மை எஞ்ஞான்றும் ஒங்குமன்றோ? பகைவர்களால் இழிவுற்றும், இகல்வரால் எள்ள

முற்றும், பகைக் கடலால் பாழ்பட்டும் கிடந்த திராவிடச் சிறப்பைச் சில பேரறிஞர்கள், ஆய்ந்து வெளியிட்டதால் உலக சரிதமே ஒரு மாறுதலடையும் நிலைமையை அடைந்தது. புதிய ஆராய்ச்சியின் பயனாய் ஆதிமக்கள் திராவிடர்களோ என ஐயப் பாடு கொள்ளவும் இடம் இருக்கின்றது. இவ்வாராய்ச்சியால், திராவிடரே பாரதநாடு முழுவதும் பரவியிருந்தனர் என்பது விளங்கும். அவர்களின் நாகரீகம் ஆரிய நாகரீகத்தினும் உயர்ந்து விளங்கிற்று என்பதற்கு மறுக்கொணாச் சான்றுகள் உள்ளன. நிற்க, புதிதாய்ப் புகுந்த ஆரியர், தாங்கள் இந்தியா வில் சென்றவிட மெல்லாம், அந்தந்த நாட்டுமக்களின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, அவைகள் தங்களுடையனவே எனக் கூறும் குணம் படைத்திருந்தனர் என்பது சுவஸ்திக் காவே விளக்கும். திராவிடருடைய முதிர்ந்த நாகரீகத்திற்கு அடையாளம் அவர்கள் கண்ட 'சுவஸ்திக்கா' என்னும் குறியேயாகும். எனவே, இதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

மக்கள் ஈடேற்றத்திற்கு அறிகுறியாய் விளங்குகின்ற **புனிதச் சிலுவை** அடையாளந் தவிர, 'சுவஸ்திக்கா' என்னும் சின்னத்தைப் போல் உலகம் முழுவதிலும் பரவியுள்ள சின்னம் வேறு ஒன்றும் இருந்ததில்லை. **சீனத்**திலிருந்து **எத்ரூரியா** வரை யிலும், **டேன்மார்க்கி**லிருந்து **சிலோன்** வரையிலும், அசோகன் சாஸனங்களிலும், உரோமாபுரியிலுள்ள கிறித்தவக் கல்லறை களிலும், ட்ராயிலும், அயர்லாந்திலும், கிரேக்க நாட்டிலும், ஹங்கேரி, கிரீட் முதலிய நாடுகளிலும் சுவஸ்திக்காக் குறி கற்களில் வெட்டப் பட்டும், பாண்டங்களில் தீட்டப் பட்டும், இலச்சினைகளில் பொறிக்கப்பட்டும், மற்றும் பொருள்களில் வரையப்பட்டும் கிடக்கின்றது. பிற் காலத்திலுங் கூடப் புகழ்பெற்ற ஒரு மகாராணி இவ்வடையாளம் தெய்வத்தன்மை வாய்ந்தது என்று நினைந்து உயிரிழந்ததாகத் தெரிகிறது. இக் காலத்திலும் அரசியற் கிளர்ச்சிக் குழுவினர் இச்சின்னத்தைத் தங்கள் கொடிகளில் பொறித்துள்ளனர்; சிலர் குல அடையாள மாகவுங் கொண்டுள்ளனர்.

செருமானியர் தங்கள் கொடியில் இச்சின்னத்தை வரைந் துள்ளனர். இதன் வரலாற்றை அறியாது செருமானியர் இவ் வடையாளத்தை வரைந்தனர் போலும். மோகஞ்சுதாரம் என்ற விடத்தில் கிடைத்துள்ள ஆதாரங்களால், ஆரியர் இந்நாட்டில் குடியேறுவதற்குப் பல்லாயிரவாண்டுகளுக்கு முன்னே, திரா விடர்கள் இச்சின்னத்தைக் கண்டு பயன்படுத்தினர் என்றும்,

அவர்களே இப்பெரும் உலகத்திற்கு அதை அளித்தனர் என்றும் ஐயமற விளங்குகிறது.

'சுவஸ்திக்கா' என்பதின் பொருள்தான் என்ன? அதன் பிறப்பு வரலாறு யாதோ என வினு நிகழுமன்றோ?

இச்சொல்லை நோக்க, அது ஆரியம் என்று எவரும் கூறுவர். ச்வ—அஸ்திக்—கா என்று பிரிக்கப்படும் இச்சொல் 'மங்கள முண்டாகுக' என்ற திரண்ட பொருளைக் கொண்டுள்ளது. திராவிடச் சொல்பெறுதே வடமொழிச் சொல்லை இஃது ஏற்றது எற்றுக்கோவெனின் அதன் விடையை ஈண்டுக் கூறுவோம். ஆரியர் என்ற பரதேசப் பண்டைமக்கள் இந்தியாவினுள் நுழைவதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன், திராவிட வகுப்பைச் சார்ந்த மக்கள் 'மோகஞ்சுதாரம்' என்ற விடத்தில் வசித்து வந்தார்கள். அவர்கள் தீச்சார்புருவண்ணம் தாயத்துக்களை உபயோகித்து வந்தனர். அத்தாயத்துக்களில் இச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இன்னும் அவர்களுடைய சாசனங்களில் இவ்வடையாளம் காணப்படுகிறது. எனவே, இப்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்களால், சுவஸ்திக்காவின் பிறப்பைப் பற்றி எத்தகைய ஐயமும் தோன்றுவதற்கு இடமில்லை. திராவிடச் சொற்களையும், சமூகக்கொள்கைகளையும், தம்வயப் படுத்தி, அதற்கு மூலப்பகுதிகளை வகுத்து ஆரியமே என்று கூறியவர் சுவஸ்திக்காவையும் தம்மகப்படுத்தி அதன் உரிமையாளரான திராவிடப் பகைவரின்மேற் கொண்டுள்ள இகலின் தன்மையால், அதைக் குறிக்கும் திராவிடச் சொல்லையும் களைந்து அதற்கு ஆரியச் சொல்லைச் சூட்டிவிட்டனர். இவ்வாறு பல பொருள்களைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் இன்று பல ஒழிந்தன என்பதை யாவரும் அறிவர். இது வியப்பல்ல. தென்னுட்டின் நிகழ்ச்சிகளை, வடமொழியில் எழுதி வைத்து விட்டு, அந்நிகழ்ச்சி தமிழ் மொழியில் வெளியிடப் பட்டால், அது வடமொழி மொழிபெயர்ப்பு என்று கூறும் அறியா மக்களை நாம் இன்றும் காண்கின்றோம். நனிநாகரீகம் நடு உச்சியிலிருக்கும் இற்றை நாளில் இக்கொடுமையாயின் பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மக்களின் நிலை எவ்வாறிருந்திருக்கும் என்று படிப்போர் உணர்ந்துகொள்க. வஞ்சகம் கொஞ்சமும் அறியாத திராவிட மக்கள் பொய்த் தோற்றம் கண்டு பொள்ளெனப் பகைவர் வாயிலகப்பட்டிருக்கலாம். நிற்க, சுவஸ்திக்காவின் பொருள் தான் யாதோ? அதன் அறிகுறி என்னையோ?

மோகஞ்சுதாரம் என்ற நாட்டைச் சார்ந்த தாஸ்யுக்களுடைய ஊர்களைப்பற்றியும், அவர்களுடைய அரண்கோலிய நகரங்களைப் பற்றியும் இருக்குவேதம் பறை சாற்றுகிறது. இவர்கள் யாவரெனின், திராவிடத் தமிழ்ப் பெருங்குடிகளே. இவர்களை, தாஸ்யுக்கள் என்றும், தைத்தியர் என்றும், நாகர்கள் என்றும் அசுரர்கள் என்றும் ஆரியர் அழைத்தனர். நாட்டைப் பற்றவந்த இந்த நாடோடிகளின் செயலையும் பழக்க வழக்கங்களையும் கண்டு, திராவிடர்கள் 'மிலேச்சர்' என்று பொருள்படும் 'ஆரியர்' என்ற பெயரிட்டு அவர்களை அழைத்தனர். இருதிறத்தினரும் பலவாண்டுகள் போர்செய்து வந்தனர் என்று இராமாயணம் முதலிய நூல்களால் அறிகின்றோம். இறுதியில் திராவிடருள் காட்டிக்கொடுக்கும் சில கயவர்களால், ஆரியரே வென்றனர். இவ்வாறு சராசந்தன் என்ற புகழ்மிக்க திராவிடத் தலைவன் கண்ணனைப் பன்முறை புறங்காட்டி யோடச்செய்தான் என்று நூல்கள் வாயிலா யறிகின்றோம். இச்சிறந்த ஆற்றல் திராவிடர்களுக்கு எங்கிருந்து வந்தது என்றால், அஃது அவர்களுடைய நகர அமைப்பிலிருந்தே என்பது போதரும்.

இத்திராவிடர்கள், பலமான கோட்டைகள் கட்டித் தங்கள் நகரங்களுக்கு அரண் செய்திருந்தனர்; அகன்ற தெருக்களை அழகாக அமைத்திருந்தனர். கைத்திறம் பொருந்திய கட்டிடங்களை, அழிந்த நிலையிலிருக்கிற மோகஞ்சுதாரம் இன்றுங் காட்டிக்கொண்டு தன்னொளி வீசிக்கொண்டிருக்கின்றது. இந்த நுட்பம் அமைந்த நகரங்களின் உட்கருத்தை அறிய முடியாததாலே, வானத்திலே போர்நடந்தது என்று சிலபுராணங்களிலே கூறப்படுகின்றது. இவை திராவிடச் சிற்பங்கள் என்று எவ்வாறு காண்கின்றோமோவெனின் தென்னிந்தியத் திராவிடச் சிற்பிகளால் எழுதப்பட்ட நகர அமைப்பு நூல்களின் பொருள், சிந்துநதிச் சூழல்களில் தோண்டி எடுக்கப்படும் நகர அமைப்புப் பொருள்களோடு முற்றிலும் ஒத்திருக்கின்றது. அந்த நூல்களில் பலவித நகர அமைப்புத் திட்டங்கள் கூறப்பட்டுள்ளன. அச்சட்டங்களில் சுவஸ்திக்காச் சட்டம் ஒன்றாகும். இந்த சுவஸ்திக்கா வடிவத்தில் (Plan) கட்டப்பட்ட நகரம் இரண்டு பெரிய நீண்ட அகன்ற தெருக்களைக் கொண்டுள்ளது. அவை சிலுவை போன்று குறுக்கே சென்று நடுவில் ஒன்றையொன்று சந்திக்கின்றன. இவ்வடிவத்தில் அமைக்கப்பெற்ற நகரம் பகைவரால் எளிதில் கைப்பற்றமுடியாது. சுட்டசெங்கற்களாலும், இட்டிகையாலும் கட்டப்பட்டுச் சுவரின் மேற்பரப்பில் வீரர்கள்

நின்று போர் செய்வதற்குத் தகுந்த தலையகலத்தைக் கொண்டுள்ளது. நகரம் கோட்டைச் சுவரால் வளையப்பட்டிருப்பதால் தெருவினுள்ளே, பகைவர் நேரே செல்லமுடியாது. ஆனல் அரணின் வலதுபுறமாவது இடதுபுறமாவது திரும்பிப்பார்த்தால் ஒவ்வொரு தெருவினுள்ளும் செல்வதற்குத் தகுந்த வாயில்கள் கோட்டைச் சுவரில் காணப்படும்.

நகரத்திற்கு இவ்வளவு சூழ்ச்சிற அமைப்பு எதற்கு எனின், இதற்கு விடை போர்த் தந்திரமேயாகும். புறத்தோர்க்குத் தோண்டலாகா வன்மையும் தொன்மையும் கொண்ட கோட்டையாதலால், பகைவர், வாயில் வழியா லல்லது வேறு எவ்வழியிலும் செல்லவியலாது. பகைவர்கள் வாயிலைக் கடந்து இரண்டாவது கோட்டைச் சுவரின் பக்கத்தில் வருவதற்கு முன் இருகோட்டைச் சுவரின் இடுக்கில்வந்து நிற்க வேண்டும். அதற்குள் நொச்சியார் போருக்குத் முற்பட்டு கோட்டைச் சுவரின் மேலிருந்துதாக்கி அழிப்பார்கள். எனவே, சுவஸ்திக்கா வடிவில் கட்டப்பட்ட நகரை ஒன்னர் எளிதில் கைப்பற்றமுடியாது. ஆதலால் குடிகள் தங்கள் செல்வத்தோடு பகைவரின் அச்சமின்றி வாழ்ந்துவந்தனர். இந்தியாவின் பழைய கோட்டைகளும் மராட்டியர் கோட்டைகளும் இவ்விதமாகவே அமைந்திருந்தன. பகைவர் பயம் இன்றி மக்கள் வாழ்ந்துவந்ததால் அவர்கள் வாழ்க்கை சிறந்து வளர்ந்து ஓங்கியது; ஆதலால் இந்தச்சின்னம் சிறந்த வாழ்வுக்குறியாக விளங்கியது. இதன் மங்கலவாழ்வை எண்ணி முதன் முதலில் இந்தியாவில் நுழைந்த ஆரியர் இக்குறிக்கு ஆரியப் பெயராகிய சுவஸ்திக்காவை இட்டு ஆசிகூறத்தொடங்கினர். 'சுவஸ்தி' என்னும் சொல்லோடு 'கா' விகுதி சேர்த்துக் கூறப்பட்டது மல்லாமல், இன்றும் இப்பெயரே மேலைநாடுகளில் வழங்கிவருகிறது.

இஃது ஒரு இலச்சினையாக விளங்கியது மன்றி திராவிடப் பழஞ் சொல்லான 'நலம்' 'நன்மை' என்று பொருள் படும் தமிழ்ச்சொல்லைக் குறிக்கும் ஓர் அடையாளமாகவும் விளங்கியது. ஆரப்பாவில் ஐந்துவகை 'சுவஸ்திக்கா' காணப்படுகின்றன.

அந்தசாசனத்தில் கண்ட தொடர்மொழி "கலக்கு ஊரீர் அது ஐநலம்" இதன்பொருள் "ஐந்து ஊர்கள் கலந்த செழிப்புள்ள நாடுகள்" படைப்புக்காலந் தொட்டு இந்தியாவில் ஐந்து என்ற எண்மங்கலமாகக் கருதப்பட்டுவந்தது. எனவே, ஐந்து

வகைச் செல்வங்கள் என்று முதலில் பொருள்பட்டுப் பின்னர் பல்வகைச் செல்வத்தைக் குறிக்கும் எண்ணாக மாறியது.

சிலோனில் கண்ட தொல்லைக்கால நாணயங்களிலும் இக்குறிகள் இப்பொருளிலே காணப்படுகின்றன. இக்குறிகளில் பொதிந்துள்ள சொற்றொடர் பின்வருமாறு:-“தண்ணெழில்நலம் நால்வீடு உயிர் மலா” (Tanelil nalam nalvid Uir mala) The life of the many prosperous houses in the Cool sun. (*ie.* the moon) (is) the mountains.



பண்டை இந்தியக்குறிகளோடு சுவஸ்திக்காவும் சீனத்திற்குச் சென்றது. ஆனால் தொல்லைக் காலச் சீனர் இக்குறியையும், தற்காலச் சீனர் அதனை யொத்த குறியையும், கொண்டுள்ளனர். அவர்கள் சதுரம் என்று பொருள்படும் பேங் (Fang) என்று கூறுகின்றார்கள். நகரம் சதுரமாயமைந்திருந்ததால் இப்பெயரைக் கொண்டனர் என்று அறியக் கிடக்கிறது. இதிலிருந்து, பண்டைக் காலத்தில் இந்த இரண்டு பொருளும், ஒன்று சீனத்திலும் மற்றொன்று இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் வழங்கப்பட்டது என்று தெளிவாகிறது.

திரமிழர்கள் (தமிழர்கள்) மேல்நாட்டாரோடு வியாபாரம் செய்யக் கடல்கடந்து சென்றபொழுது இக்குறியை கிரீட், கிரீஸ், எத்ரூரியா, ஐபீரியா, முதலிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் கொண்டு சென்றனர் என்று ஆராய்ச்சியால் தெரிகிறது. அவர்கள் மோகஞ்சுதாரம், சிலோன் முதலிய விடங்களில் கிடைத்துள்ள சாசனங்களில் குறிக்கப்பட்ட “நலத்தொடு வாழ்க” என்னும் கருத்தைக் குறிக்கும் அடையாளத்தையே கொண்டு சென்றனர். இவ்விதமாக, குடிக்கும் குவளைகளிலும் இக்குறி பொறிக்கப் பட்டிருப்பதை இன்றும் காணலாம். இக்குறியீட்டின் பொருள் “குடித்து நன்கு வாழ்க” என்பதே. கிறித்தவக் கல்லறைகளிலுள்ள நினைவுச் சின்னங்களில் இக்குறி பொறிக்கப்பட் டிருப்பதின் நோக்கம் மறுவுலகில் இறந்தவர் நன்கு வாழ்க’ என்பதைக் குறிப்பதற்காகவே யாகும்.

இவ்விதமாக, திராவிடர் கண்ட சுவஸ்திக்காவின் ஆதிக்கம் உலகத்தின் கீழ்முனையிலிருந்து மேல்முனை வரையிலும் பரவியிருந்தது. எனினும் திராவிடர்களிடத்திருந்தே இது தோன்றியதால் இந்தியா முற்றிலும், சுவஸ்திக்காவின் உரிமையாளரான திராவிடர்கள் பரவிச் சீரும் சிறப்பும் பெற்று நன்னிலையில் நனி சிறந்திருந்தனர் என்பது போதரும்.

# பொருள் உறுமுறை

திரு. K. கோவிந்தன், மாணவன், ஔவைத் தமிழகம், திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி, துணர்: 14, மலர்: 12, இதழ்: 476)

## வறுமை

வறுமையென்பது, தன்னை உற்றாரை என்றும் ஆறுதலற்ற நிலையிலேயே இருக்கச்செய்து, பேரிடர் விளைக்கும் இயல்புடைய ஒன்றாம். எனினும், அஃதுற்றார், பசியும், பிணியும் நீங்கி வாழப்பெறுவராயின், அவர் என்றும் மன அமைதி என்பதே யிலராய் இருக்கும் பொருளுடையாரைப் போல் அல்லாமல், மன அமைதியும், அதன் காரணமாக உள்ளக் களிப்பும் உடையராகவே இருப்பர். தம்முடைய இருபதாவது ஆண்டில் தாம்பெற்று வாழ்ந்த பொருள் அளவைக் காட்டினும், பன்மடங்கு மிக்க பொருளைத் தம்முடைய அறுபதாவது ஆண்டில் பெற்று வாழ்வார் பலரைக் காண்கின்றோம்; எனினும், அவருள் ஒருவராயினும், தம்முடைய இருபதாவது ஆண்டில் பெற்று வாழ்ந்த இன்பவாழ்க்கையை விட தம்முடைய அறுபதாவது ஆண்டில் பன்மடங்கு மிக்க இன்ப வாழ்க்கையைப் பெற்று வாழ்வதாகக் கூறுகின்றாரில்லை. உள்ளக்களிப்பின், உண்மை, இன்மைகள், ஒருவற்கு இயற்கையே வாய்த்துள்ளனவே யொழிய, அவ்வுண்மை, இன்மைகளுக்குப் பொருள் காரணமாகாது என்பதே அறிவுடையார் கொள்கை. ஒருவனுடைய பசிப்பிணியைப் போக்கலாம், ஆனால் அவனுடைய மனச்சோர்வினைப் போக்குதல் இயலாது.

வறுமை வாழ்க்கையுடைய பெண் ஒருத்திக்குப், பெரிய வீடு, எண்ணற்ற வேலையாட்கள், வகை வகையான வனப்புறு உடைகள், ஒப்பனை செய்யப்பெற்ற நீண்ட தலைமயிர் ஆகிய இவைகளைக் கொண்டு வாழும் வாழ்க்கை மிகவும் இனிமையுடையதாகத் தோன்றலாம்; ஆனால் அவை யனைத்தையும் கொண்டு வாழும் வாழ்க்கையையுடையா ளொருத்தி, இவற்றின்பால் உள்ள விருப்பக் குறைவான், நாளின் மிக்க காலப்பகுதியை இவற்றினின்றும் நீங்கி வெளியிடங்களில் வதிய விரும்புவதைக் காண்கின்றோம். தெளிந்த அறிவுடையாரைக் காட்டினும்,

குடிக்கும் இயல்புடையார் களித்த உள்ளமுடையராய் இருக்கின்றனர்; நல்லியல்புடையார் தாம்தொடங்கிய வேலை மடங்கலின்றி இனிது முடியுமளவும், இன்பமிலராகவே யிருத்தலைக் காண்கின்றேம்.

இந்நெறி, வறுமையுற்றாரைப் போன்றே பொருளுடையாரும் மனஅமைதியின்றி யிருத்தலின், அப்பொருளுடையார் தாமும் வறுமையுடையரே யாவர்; என்னை? "செல்வ மென்பது சிந்தையின் நிறைவே, அல்கா நல்குரவு அவாவெனப்படுமே" என்பவாகலின். ஆகவே வறுமை மக்களால் வெறுக்கப்படுதற்குக் காரணம், அது மக்களுக்கு மனஅமைதியின்மையினைக் கொடுத்தலான் அன்று; மற்றென்னையோ காரணம் எனின்? அது, தன்னையுற்றாரைப் பிறமக்களினும் இழிவுடையராக, கீழ்மக்களாக எண்ணச் செய்தலே யாம் என்க.

இதுகாலை, நம்மிடையே நிலவும் இவ்வறுமை, ஏழை மக்களை இழிவுபடுத்துவதோடு நில்லாது, அவர்களைச் சுற்றியுள்ளாரையும் இழிவுபடுத்துகின்றது. வறுமையான் உளவாம் பல விளைவுகளினின்றும் தப்புதல் பொருளுடையானுக்கும் இயலாது. வறுமை காரணமாகப், பல்வேறு தொடர் நோய்கள் தோன்றுமாயின், பொருளுடையானும் அந்நோய்வாய்ப் படுதல் கண்கூடாம். வறுமை காரணமாகக் கொலையுங் களவு ஆகிய கொடுஞ் செயல்கள் நாட்டிடையே தோன்றின், பொருளுடையார் அவற்றினுக்கஞ்சி, தம்மையும், தமரையும், தம்பொருளையும் காத்தற் பொருட்டு மிக்க பொருளைச் செலவிடுகின்றனர். வறுமையுற்ற மக்களின் சிறாரிடையே, அது காரணமாக, ஒழுக்கமற்ற செயல்களும், திருத்த மற்ற சொல்லாடலும் தோன்றுமாயின், அவை பொருளுறு மக்களின் சிறாரிடைப் பரவாமல் இருப்பதில்லை. இளமையும், அழகும் வாய்க்கப் பெற்ற ஏழைப்பெண் ஒருத்தி, நன்னெறி வாழ்க்கையினும், தீநெறி வாழ்க்கையான் மிக்க பொருள் எய்தலாம் என எண்ணுவளாயின், அவ்வெண்ணத்தின்வழி சென்று, பொருளுடைய இளைஞன் ஒருவனுடைய வாழ்க்கையையும், அவன் தன் செந்நீரையும் கெடுத்து, அவன்வழி அவனுடைய இல்லக் கிழத்தி, மக்கள் ஆகியவர்களை நோய்வாய்ப் படுத்துவள்.

இவ்வறுமையான் உற்ற பெருவிளைவுகளைக் கண்டு அஞ்சிய பொருளுடையார், அவ்வறுமையாளரைத், தாங்கள் வாழும் இடத்தினின்றும் பிரித்து வேறு ஒரு தனித்த இடத்தே வாழவைப்பதன் மூலம், அவர்களைப் பார்த்தலையும், அவ்வறுமை

யால் விளையும் விளைவுகளையும் நீக்கலாம் என எண்ணலாம்· ஆனால் அதுகூடாதகாரியம் என்பதே அறிவுடையார் கொள்கை. நாம் பிறர்க்கென வெட்டுங் குழியில் நாமே விழவும் நேரிடும். நன்னிலையில் வாழ்ந்துவந்த பொருளுடையார் பலர், வறுமைக் குழியில் வீழ்வதை நாள்தோறும் காண்கின்றோம். அம்முறையே அடுத்து அக்குழியில் விழும் முறை நமக்கே நேரிடவும் கூடும். நேரிடாது என யாங்ஙனம் கூறமுடியும். ஆகவே, மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புவாராயின், அவர்கள் முதன்முதலில் நாட்டிலுள்ள வறுமையைப் போக்க முயலுதல் வேண்டும். அவ்வாறின்றி, நாட்டில் வறுமை வேரூன்றி நிற்க, தாம் மட்டில் அஃதுற்றாரைக் காணுமலும், அவ்வறுமையான் உளவாம் பல விளைவுகளான் பற்றப்படா மலும் வாழ முற்படுவாராஞல், அச்செயல் கூடாத செய்கை யாகவே முடியுமென்பதுறுதி.

ஆகவே, நாட்டில் உள்ள பொருளுடையார் ஒவ்வொரு வரும் தம்மைச் சுற்றியுள்ள வறுமையைப் போக்குதற் பொருட்டுத் தம்முடைய பொருளின் மிக்க பகுதியை ஒதுக்கு தலைத் தம்முடைய முதற்பெருங் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். தம்முடைய நாட்டில் யாரும் வறுமை காரணமாகப் பற்றுக்கோடிலராகவோ, இரக்கவோ கூடாது என்ற ஒருமுறை இங்கிலாந்து நாட்டில், எலிசபெத் அரசியார் காலத்திலிருந்து இருந்து வருகின்றது. அந்நாட்டில் வறுமையாளர் இருப்ப ராஞல், அவர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் கொடுத்துப் பேணுதற்காகவேண்டி ஒரு சிலரை அரசியலாரே நியமித்துள்ளார்கள். ஆனல் அத்தலைவர்கள் அவ்வறியோர்க்கு அத்தகைய உதவியைச் செய்யுங்கால், உள்ள நிறைவின்றிச் செய்யினும் செய்வர்; அவ்வறுமை யுற்றாரை வெறுத்து இழிவு படுத்தவும் கூடும்; அவர்களை இழிவு தரத்தக்க, பயனற்ற பல வேலைகளைச் செய்யப் பணித்து, மறுப்பாராயின் சிறைக் கோட்டம் அனுப்பவும் கூடும். சுருங்கக் கூறின் அவ்வறுமை யாளர், இத்தகையாரை அண்மி, பற்றுகோடடைந்து வாழ் வதினும், வறுமைக்குழியில் வீழ்ந்துழல்வதே சாலச் சிறந்தது என எண்ணக்கூடிய நிலையில் அவர்களை நடத்தவும்கூடும். இவ் வாறு வறுமையான் உளவாம் இழிதன்மைகளைப் போக்குதற் பொருட்டு மேற்கொண்ட இம்முறையான் இறுதியில் முன்னையி னும் மிக்க இழிதன்மை நாட்டில் உளவாதலைக் கண்டே நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் வறுமை யென்பதே இருத்தல் கூடாது என அறிவுடையார் பலரும் கூறுவாராயினர்.

நாள்தோறும் பொருள்கள் நம்மையறியாமலே பங்கிட்டே வருகின்றன என்று முன்னரே கூறியுள்ளோம். அவ்வாறு பொருளைப் பங்கிடுங்கால், ஒவ்வொருவரும் கூடியவரை நேரிய முறையில் வாழ்தற்கு எவ்வளவு பொருள்வேண்டுமோ, அவ்வளவு பொருளைப்பெறும் முறையில் கூறிடுதல் வேண்டும். யாரேனும் ஒருவர், தமக்கிட்ட வேலைப்பகுதியை, உரியகாலத்தில் செய்து முடிக்காமலோ, அன்றி முற்றிலுமே செய்யாமலோ விடுவாராளுல், அவரைக் கட்டாயப்படுத்தியோ, அன்றி வேறு முறையிலோ அவ்வேலையைச் செய்ய வற்புறுத்தலாமே ஒழிய, அதுகுறித்து அவருக்குரிய பொருளைக் கொடாமல் அவரை வறியராக்குதல் செய்யக் கூடாத செய்கையேயாகும்.

இந்நெறியே நோக்குங்கால், பொருளைக் கூறிடுகின்ற பற்பலமுறைகளும் பயனற்றனவாகக் கழிதலான், நாட்டில் உள்ள எல்லா மக்களும் ஒத்த அளவுள்ள பொருள்களைப் பெறுகின்ற முறையில் கூறிடுதலாகிய முறையே சாலச் சிறந்தது என்பது பெறப்பட்டது. அம்முறை மேற்கொண்டாலன்றி, நாட்டில், ஆடம்பரவாழ்க்கை நீங்கி, மிடியும், படியும், குறைந்து, கொலையும், களவும் இன்றி, பயனற்றதும், பழுதுபட்டதுமாகிய பொருள் குறைந்து மிக்க வுணவும், மிக்க உறையும், சிறந்த உறையுளும் சிரியபாதுகாப்பும், பிணியின்மையும், செல்வச் செருக்கும் உளவாகாவென்பதே அறிவும் நெடுநாட் பயிற்சியும் உடைய பல்லோர் கொண்டகொள்கையாம்.

## கலைகளும் வித்தைகளும்

### (SCIENCES AND ARTS.)

ஆசிரியர், திரு. த. இராமநாத பிள்ளை அவர்கள் B.A., (Lond.)
தும்பளை பருத்தித்துறை, இலங்கை.

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 4, பக்கம் 140.)

#### தத்துவநூற் பொருள்

தத்துவநூலோர் உள்பொருள் யாதெனத் தம்புத்திக் கெட்டியவாறு ஆராய்கின்றனர். தத்துவ ஆய்ச்சி என்பது உள்பொருளின் பரமவுண்மை எத்தன்மையதென அளவைகளால் ஆராய்தலே. உள்பொருளின் பல்வேறு தோற்றங்களையும்

இயற்கையாராய்ச்சி முறையாகத் தோற்றாலும் அத்தோற்றங் களைப் பாகுபடுத்திச் சிற்சில பகுதிகளை அளத்தலன்றி முழு வதையும் ஒருமுதலாகக் கலைகள் தேர்கின்றில. பரமவுண்மை யின் ஓர் அங்கத்தையேனும் சிலவற்றையேனும் கலைகள் ஆராய் கின்றனவாக, தத்துவவாராய்ச்சி பரமஞான முழுவதையும் ஒரு முதலாக ஆராய்கின்றது. மனிதனுடைய அநுபவத்தைப் பகுதி பகுதியாக வகுத்து அளவாமல் அதை ஒரு அவயவியாக எண்ணி அளத்தலே தத்துவ நூலோரின் நோக்கம். கலைகள் ஒவ் வொன்றும் தத்தம் பகுதிகளைப் பொது வநுபவத்தினின்று பிரித்தெடுத்து அளக்கின்றன. கலை அநுபவத்தை அவயவப் படுத்திய பின் ஒவ்வொன்றாய்த் தேர்கின்றது. கலைஞர் தம் நூற்பொருளைச் சேதனனுக்குப் பிறிதாகிய ஒரு புறப்பொரு ளாக எண்ணுகின்றனர். ஆதலின் கலைகள் அப்புறப்பொருள் ஞானத்தினுடன் அவினாபாவமாகவிருக்கும் சேதனனுடைய விஞ்ஞானத்தை அளந்தறிகின்றில. உள்பொருளை ஆயுங்காலை, அறிபவனுடைய தன்மையும் அறிபொருளின் தன்மையும் அறிவின் தன்மையும் ஆய்தல் அவசியம். அறிபவனும் அறி பொருளும் ஓர் அத்துவிதக் கலப்பால் அறிபவன் அறிபொரு ளென வேறின்றி ஒன்றாய் இருக்கும் என்பதை இயற்கை யாராய்ச்சிக்கலை கூறுகின்றில. அவ்வாராய்ச்சி கலைக்கு உரிய தன்று; அறிவு நூலுக்கே உரியது. தத்துவநூல் அநுபவத்தை அறிபவனுக்கும் அறிபொருளுக்குமுள்ள ஒரு தொடர்பெனத் துணிகின்றது. தத்துவமசி என்னும் வேதவாக்கியம் இதை வலியுறுத்துகிறது. அறிபவனும் அறிபொருளுமில்லையெனின் சூனிய வாதமாகும். அறிபவன் மாத்திரமுண்டு அறிபொரு ளில்லையெனின் விஞ்ஞான வாதமாகும். இயற்கை ஆராய்ச்சி முடிபுகள் முரணே அல்லவோ என ஆராய்ந்து முரணின் அமைதி காட்ட முயலுதலே தத்துவநூலின் நோக்கமாகும்.

## இயற்கை யாராய்ச்சிகளும் ஒழுக்கநூலும்.

பௌதிகம், பொருணூல், உடனூல், உயிர்நூல் முதலிய இயற்கையாராய்ச்சி நூல்கள் பரமாணுக்கள் உண்டென்றும் அப்பரமாணுக்கள் அசைவுப் பிரமாணங்களுக்கு இயற்கை யாகவே அமைந்து அசைகின்றனவென்றும் அக்காரண காரிய உருவமே இவ்வுலகென்றும் வற்புறுத்துகின்றன. மேலும் நிலை யில்லாத் தோற்றங்கள் யாவும் காரண காரியத்தால் கட்டுப் பட்டு இருக்கின்றன எனவும் இயற்கைவிதி யாண்டும் விதியாகு மாகலான், உலகத்திலுள்ள சேதனு சேதனப் பொருட்கள்

எல்லாம் விதிவாய்ப்பட்டே பந்தப்பட்டு இருகின்றனவெனவும் அறிவுநூல்கள் மொழிகின்றன. ஊழ் என்னும் விதிவசமாகவே ஆன்மாக்கள் உழலுகின்றன. ஊழின் பரதந்திரத்திலிருந்து ஆன்மா தப்பவியலாது. இயற்கையாராய்ச்சிகள் ஆன்மாக்கள் உண்டாயின் அவற்றிற்குத் தம்வயமில்லையென முழங்க; ஒழுக்க நூல்கள் ஆன்மாக்கள் பரதந்திரராயின் மக்களை தம் வினைகளுக்குப் பாத்திரராக எண்ண வியலாதெனச் செப்புகின்றன. ஆன்மாக்கள் தம் வயத்தன (மக்கள் சுய தந்திரர்) என்பதை ஒழுக்கநூல் மெய்ப்படுத்திக்காட்ட வியலாத ஒரு உண்மையாகவும் ஒழுக்கத்திற்கு இன்றியமையாததோர் உரையாகவும் ஓதும். பரதந்திரப்பட்டோரை எவ்வாறு துன்பத்தால் தண்டிக்கலாம்? செய்வோன் ஒருவனிருக்க அவனது கருவியைத் தண்டிப்பதால் செய்வோனை எங்ஙனம் திருத்தலாம். செய்வோனின் முன்னிலையில் வினைநிகழுமாயின் அவனை அவ்வினையின் வினைமுதலென யாங்ஙனம் கூறலாம். செய்பவன் நிலம் செயல்காலம் கருவி செய்பொருள் என்பவற்றை நுண்ணிதாகத் தெரிந்து தெளிந்து ஒருவன் வினையாடினுனுபின் அவ்வினைக்கு அவனைப் பாத்திரனெனக் கொள்ளலாம். அங்ஙனம் இன்றேல் அவனை எப்படிப் பாத்திரனெனச் சுட்டலாம்? பௌதிகநூலார் பூதங்களே உள் பொருட்கள், மூலப்பிரகிருதியே உண்மை என்றாற்போன்ற மதங்களை நாட்டுகின்றனர். இங்ஙனம் இயற்கையாராய்ச்சிகளின் முடிபுகள் ஒழுக்கநூன் முடிபுடன் நனிமுரணுவதைக் காண்க.

## தத்துவநூலே கலைகளுக்கு ஆதாரம்

இம்முரணினை நீக்கி உண்மையை மொழிதலே தத்துவநூலின் முயற்சியாகும். ஆராய்ச்சிக் கலைகள் தமக்கு இன்றியமையாத முடிபுகள் என மொழியும் மதங்களின் உண்மை, எத்தன்மையவெனத் தத்துவநூல் தேரும். கலைகள் யாவற்றானும் உணரப்படாத அந்தரங்கவுண்மையே தத்துவ நூலின் நூற்பொருளாகும். இங்ஙனம் முரணின்மையைக் காட்டினும் அவ்விளக்கமும் அளவைநூற் பிரமாணங்களுக்கு அமையவேண்டும். ஆகலான் காண்ற் இடித்துரைத்தவாறு தத்துவநூல் எவ்வாராய்ச்சியின் முடிபையும் நுணுகி ஆராயவேண்டும். தத்துவநூலார் இங்ஙனம் ஆராயாமல் தாம்தாம் நம்பியிருக்கும் மதங்களை நாட்டுதல் பெருந்தவறாகும். தத்துவ ஞானிகள் பிராந்தி ஞானத்தால் தம்மதம் நாட்டுவோராகின், அத்தகைய ஞானத்தால் தத்துவநூல் ஒருபோதும் வளராது. இத்தகைய மதங்களிலும் சூனியவாதம் சிறந்ததாகும். என்னை! யாவற்

றையும் ஐயுறுவோர் ஆராயும் சத்தியுடையோராய் ஒருபாற் கோடாது, நிலையில்லாதவற்றை நிலையுள்ளவற்றினின்றும் பிரித்தறிந்து உண்மையைக் கடைப் பிடிப்பார். தத்துவநூலார் அநுபவ சம்பந்தமான யாவற்றையும் நுணுகி யாராயுங்கால் தம்புத்திக்கெட்டாத சில அநுபவங்களும் ஞானத்திற்குப் புலப்படுதலைக் குறித்துள்ளார். அவ்வநுபவங்களில் சாதாரண புத்தியால் உணரப்படாத சில உண்மைக் காட்சிகளை யோகிகள் கண்டு உரையாகச் செப்புகின்றனர். உரைகளை அநுமானத்தால் மெய்ப்படுத்திக் காட்டவியலாது. எனினும் அவ்வுரைகள் புத்தியால் அறியப்படும் காரண காரிய சம்பந்தத்திற்கு விரோதமானவற்றைக் கூறுமெனக் கருதலாகாது. புத்தியை அப்பியசித்து வரப் புத்தியினின்றும் ஓர் சிறந்த சுத்தபுத்தி வளரும். அச்சுத்தபுத்தியை ஒரு அகக்காட்சி யெனலாம். அத்தகைய அகக்காட்சிகளை ஐம்புலனொடுக்க முணர்ந்த யோகிகளே காணுவாராகலான் அவற்றினை யோகக் காட்சிகள் எனினும் பொருந்தும். யோகக்காட்சிகளால் கண்ட விதிகளைக் காண்டல் கருதல் என்னும் தருக்க முறைகளால் விளக்க முடியாது. விளக்கினும் யாவருக்கும் புலப்படாது. உரை யளவையால் பல ஐயங்களைத் தத்துவநூலார் பரிகரிக்கின்றனராகலின் உரை யளவையைப் புறக்கணிக்கவியலாது. இயற்கையாராய்ச்சிகளை மாத்திரம் கற்ற புல்லறிவாளர் தத்துவநூலாரின் உரை ஒரு மூட நம்பிக்கையென இகழ்தல் விநோதமன்று. ஐம்புலவின்பம் மாத்திரம் நுகர்ந்தோர் அவற்றினும் மேலதாகிய கல்வியின்பம் நல்லொழுக்க வின்பம் முதலிய சிறந்த வின்பங்களை இகழுமாறு போல், அநுபவமில்லாதார் யோகிகளின் அநுபவங்கள் புனைந்துரையென உரைக்கின்றனர். இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் அட்டாங்கயோகஞ் செய்தோர் நாம் எதிர்பார்த்திராத வினைகளைச் செய்தலைக் கண்டாமன்றோ! பௌதிகநூல் பொருணூல் ஆகிய இயற்கை நூல்களால் அளந்தறியப்படாத விநோதங்களையும் அற்புதங்களையும் யோகிகள் செய்தலைக் கண்டும் கீழைத்தேசத்தவரின் பெருமையை வியந்து ஆனந்தமடையார் அறிவிலரே. இயற்கைநூல்களைமட்டும் நம்பிய புல்லறிவாளர் தத்துவநூலோர் கூறுவன இயற்கைக்கு விரோதமானவை, அவை நம்பத் தக்கவையல்ல, அவை அளவைப் பிரமாணங்களுக்கு மாறுனவை, அவை கலையறிவில்லாத சமயவாதிகளால் நாட்டப்படுபவையெனப் பலவாறு இகழ்ந்துரைக்கின்றனர். கலைகள் இயற்கையாராய்ச்சிகள் அளவைகள் தத்துவநூலுக்கு ஒரு

சிறிதும் தடையாதலின்றித் துணையாகு மென்பது அறிஞர் யாவருக்கும் ஒப்பமுடிந்தது. முழுதுணர்ந்த முனிவர்களும் கலைஞரும் பெரும் புலவரும் கலைகளும் தத்துவநூலும் முரணின்றி உண்மையைக் கூறல் கூடுமென மொழிகின்றனர். தத்துவநூலாரின் துணிபுகள் உரைகள் முதலியவற்றின் ஆதாரமின்றிக் கலையாராய்ச்சியால் எல்லா உண்மைகளையும் உணரலாமென இயற்கைநூல்வல்லோரும் விருத்திநூலாரும் உரைத்தல் பேதைமை. தத்துவநூலாரும் இயற்கை நூலாரின் முறைகளையே ஆளுகின்றனர். ஆகலின் தத்துவஞானிகள் துணியும் முடிபுகள் கலைகளின் துணிபுகள் போல வலியுடையவாதல் வேண்டும். இயற்கை யாராய்ச்சிக்கும் தத்துவ நூலுக்கும் வேற்றுமையாதெனின், நூற்பொருள் வேற்றுமை என்க. இயற்கைநூலார் மாயையில் தோற்றும் தோற்ற நாசங்களை ஆராய்வர். தத்துவநூலார் மாயையின் இயல்பென்ன அதற்கு அப்பாலென்ன, அதன் ஆதாரமென்ன, எனப் பலவாறு ஆராய்வர். இயற்கையாராய்ச்சிநூலோர் தநுகரண புவனங்கள் என்னும் மாயேயங்கள் நிலையான பொருட்கள் என நம்பி அவற்றினும் நிலையுள்ளவை இல்லையென எண்ணி தாம் முழுதுணர்ந்தோர் என மகிழ்கின்றனர். தத்துவ நூலோர் அவ்வளவில் மகிழாது; ஒன்றையும் நம்பாமல் இயற்கையாராய்ச்சி முடிபுகள் எல்லாம் பாசஞானமே அதினும் சிறப்பாயுள்ளது பசுஞானமே அதிலும் சிறந்தது பதிஞானமேயென அறிந்து அத்தகைய பதிஞானத்தின் பண்பை உணர்ந்து அதை அடைய விழைகின்றனர்.

## தத்துவ ஞானமும் சமயமும்

தத்துவநூலும் சமயநூலும் ஒரு பொருளின் இயல்பையே இயம்புகின்றன வாகையால் அவற்றிற்கு என்ன வேற்றுமை என வினவுவோர் உண்டு. சகல அநுபவத்தையும் சமயம் வரையறுத்துமொழிய உரிமையுடையதெனச் சமயநூலார் செப்புதல் கூடும். சமயநூலும் தத்துவநூலும் உள்பொருளின் தோற்றமும் ஈறும் யாவையென வினவுகின்றன. இது ஒற்றுமை. ஆனால் சமயநூல்கள் ஆன்மாவின் முடிவுநிலை யென்னவென ஆராயும். தத்துவநூல் உண்மைநிலை என்னவென ஆராயும். ஆன்மாவின் முடிவுநிலை ஒன்றை சமயம் அளவை முறைப்படி செப்பின் சமயத்தின் முடிபு தத்துவநூலின் முடிபோடு பொருந்தாதோ வெனின், பொருந்தும். உண்மையான சமய முடிபுகளுக்கும் தத்துவநூன் முடிபுகளுக்கும் ஒரு வேற்றுமையுமில்லை. இரண்டும் ஒன்றையே காண்கின்றன. சமயம் பல வேடங்

தரித்து உலாவுகின்ற தாகலின் சுத்த சமயத்துக்கும் அதன் விகற்பமான போலிச் சமயங்களுக்கும் வேற்றுமை யறிதல் அவசியமாகும். சமயம் நிலைநிறுத்தும் முடிபுகளை எப்போதும் ஐயுற்று அளவைகளால் தேரவேண்டும். மெய்ச்சமயம் சமய குரவரின் உரைகள் யாவற்றையும் தேர்ந்தே கொள்ளும். மெய்ச் சமயத்தின் நூற்பொருளும் தத்துவநூற்பொருளும் ஒன்றுகு மென்பதில் ஐயமில்லை; சமயங்கள் பெரும்பாலும் சமயக்கணக்கர் களின் மயக்கவுரைகளையும் நல்லுரையெனக் கோடலான், சமய நூல்களின் பொருளும் தத்துவ நூல்களின் பொருளும் வேறென்பது மிகையாகாது. சமயங்கள் ஒவ்வொன்றும் தத்தம் மதம் நாட்டுகின்றன. அம்மதங்களைச் சமயகுரவர்கள் ஆராய் வின்றியே மொழிதல் வழக்கம். ஒரு குரவர் கூறிய உரையை அவருடைய மாணுக்கர் மயக்க வுணர்வினுல் மாற்றி உரைத்தல் வழக்கம். அம்மயக்கவுரை காலக் கிரமத்தில் நல்லுரையெனப் பிற்காலத்தாரால் கொள்ளப்படும். போலியுரைகள் மிகுந்த நூல்களுக்கு உதாரணம் மிருதிநூல். புராணப் புனைந்துரை களைப் பலர் மயங்கி உணர்வர். இதுநிற்க, சமயவுண்மைகள் பரிசுத்தமானவர்களுக்கும் யோகிகளுக்கும் பத்திமான்களுக்கும் தொண்டர்களுக்கும் கடவுளுடைய கருணையால் அருளப்படு கின்றன என சமயநூலார் கூறுகின்றனர். கடவுள் அருள் என்பது பேய்த்தேர்போன்ற ஒருமயக்கம் (விவர்த்தனம்) ஆதல் கூடும் என்பர் நாத்திகர். கடவுளது உண்மையை நம்பு என் பதைச் சமயநூலார் வற்புறுத்துகின்றனர். ஒன்றன் நியாயத்தை ஆராய்தலிலும் அதில் நம்புகிறதே சிறப்பென்பர். கடவுளைப் பத்தி மார்க்கத்தால் அறியலாமேயொழிய, ஞான மார்க்கத்தில் அறிய வியலாதென சில சமயநூல்கள் மொழிகின்றன. ஞானத் திலும் பத்தியே சிறந்தது எனவும் ஞான பாதத்திற்கும் பத்தி மார்க்கமாகவே செல்ல வேண்டுமென்றும் சில சமய நூல்கள் உரைக்கின்றன. சமய குரவர்கள் கிரியைகளை வற்புறுத்து கிறுர்கள். கிரியை பிரதானமெனக் காட்டற்கு ஆயிரக்கணக் கான நூல்களை வகுத்து எழுதியுள்ளார்கள். கிரியையின்றிச் சாதனை செய்ய வியலாதெனப் பலர் கூறுப. சாதனைக்குக் கிரியை அவசியமோ வென்பது ஆராயற்பாலது. சமயம் சாதனையே பிரதானமென வற்புறுத்தும். தத்துவநூல் சாதனை யையும் சாதனையால் விளையும் பயனையும் பொருட்படுத்தாது, சமயத்தின் நோக்கம் மக்களை நன்மக்களாக்குதல். தத்துவ நூலின் நோக்கம் உண்மையை ஆய்தலொழிய வேறென்றுமல்ல. சமயவுண்மை பத்தியால் அடையப்பெறும். தத்துவவுண்மை

அளவையால் உணரப்படும். பத்தி (நம்பிக்கை) ஆராய்ச்சி வேட்கையைக் கெடுக்கும். சமய நூல்கள் மெய்ப் பாட்டுப் பகுதியை வளர்த்துச் சுத்தபுத்தியை மழுங்கச் செய்யும். தத்துவநூல் புத்தியை வளர்த்து அதன்கண் எழும் ஐயங்களை நீக்கமுயலும். சமய நூலார் சமயக்கொள்கைகளில் நம்பிச்சாதனை செய்வர். தத்துவநூலார் ஏதுக்களை ஆராய்வதிலும் வாதிப்பதிலும் காலங்கழிப்பர். வேள்வியை வளர்க்க, யாகத்தைச் செய்க, என்றாற் போன்ற வேத வாக்கியங்களுக்கு அமைந்தே சமயக் கணக்கர் சாதனை செய்கிறார்கள். சமய நூலார் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாத வழியே செல்ல வேண்டுமென்பர். ஒருசாரார் பத்திமார்க்கமே சிறந்ததென்றும் ஒருசாரார் ஞானமார்க்கமே சிறந்த தென்றும் கூறுப. திருமூலயோகிகள் யோகஞ் செய்தால் ஞானமடையலாமெனவும் அம்மார்க்கம் சிறந்ததெனவும் திருவாய் மலர்ந்தருளினர். பிராணுயாமத்தைப் பற்றிய திருமந்திரம் ஈண்டு நோக்கற்பாலது.

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக் கறிந்தபின்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே.

யோகத்தால் வாழ்நாளை நீட்டிக்கலாமாயினும் சாக்காட்டைத் தப்பலா மென்பது பொருந்தாது. சமயங் கலந்த தத்துவநூல்களால் உண்மையை ஆராயவியலாது. சுத்த தத்துவ நூலார் தம் இச்சா ஞானக் கிரியா சக்திகளைத் தூயவாக்குதற்கு, மூட நம்பிக்கையை அளவை என்னும் எரியால் எரித்துத் தூயவாக்க வெண்டுமென்பர். கேசல் சமயபத்தியை அளவையாலும் புத்தியாலும் நிறுத்து மிகுதி குறைவின்றி நல்லாற்றுப் படுத்தவேண்டுமென மொழிந்தனர். திருவஞ்செழுத்தை உச்சரித்தலினும் உணர்தலே சிறந்தது. மந்திரங்கள் பதங்கள் சின்னங்கள் எல்லாம் அவை உணர்த்தும் உண்மைக்காகவே போற்றப்படுகின்றன. தத்துவநூலைச் சமய வலையில் படாமல் காத்தற்கே ஆராய்ச்சி நூல்களும் கலைகளும் எழுந்தன. இயற்கையாராய்ச்சிகள் தொடங்கிய காலந்தொட்டுச் சமயம் வேறு தத்துவஞானம் வேறெனை அறிஞர் விளம்புகின்றனர். தத்துவநூல் சமயக் கொள்கைகளைப் பொருட் படுத்தாமல் விட்டாலும் இயற்கையாராய்ச்சிகளின் முறையையும் அளவைநூல் முடிபுகளையும் யாண்டும் பொருட் படுத்தவேண்டும். சமயப்பற்று மிகுந்த மக்கள் மூட நம்பிக்கையில் அழுந்தும் காலத்தில் தத்துவ நூல்கள் எழுந்து சமயத்தைக் காக்கின்றன. புராணங்களோடு

போர்புரிய எழுவது தத்துவநூலே. அப்போரில் தத்துவ நூலுக்குத் துணையாவது இயற்கையாராய்ச்சிகளும் கலைகளும் அளவைநூல்களுமே. சமயங்கள் எல்லாம் மக்கள் ஆக்கப் பொருட்களே. பெத்த நிலை மக்கள் முத்திநிலையைப் பற்றி உணர்தல், விலங்குகள் கடவுளைப்பற்றி ஆராய்ந்து விலங் கொன்றைத் தெரிந்து கடவுளென வழிபடுதலோடு ஒக்கும். சமயமும் தத்துவஞானமும் எப்பொழுதும் ஒன்றோடொன்று போர்புரிந்தே வந்தன. புரோற்றக்கோறஸ் முதல்வன் உண்டோ வில்லையோவெனத் தேர்தற்குத் தனக்கு நேரமுமில்லை தகுந்த ஆற்றலுமில்லை என நவின்றனன். சோக்கிரேற்றிஸ் முதலாகக் கான்ற் ஈறாக இடையிட்ட ஞானிகள் யாவரும் சமயம் மொழிந்த வற்றுள் தத்துவ வுண்மையைத் தெரிந்து தெளிய வேண்டு மென உரைத்தனர். மனம் வாக்குக் காயங்களை ஒடுக்குதலால் ஒரு சுகமுமில்லை.

அஞ்சுமடக் கடக் கென்ப ரறிவிலர்
அஞ்சு மடக்கும் அமாரும் ஆங்கில்லை
அஞ்சும் மடக்கில் அசேதமாகு மென்றிட்டு
அஞ்சும் மடக்காது அறி வறிந்தேனே

எனத் திருமூல யோகிகள் திருவாய் மலர்ந்தருளினர். அரிஸ் தாதிலும் ஐம்புலன்களை அடக்காது நல்லாற்றுப் படுத்தலே ஞானமென்றார். பதிஞானத்தை உணர்தற்குத் தியானமே வழி எனவும் கூறினர். எமது புத்தியால் நாம் அறியக் கிடப்பது யாதெனின் தத்துவநூல்கள் நுதலும் உரைகள் சில புத்தியால் அளக்கப்படாதன. நமது அளவைகளுக்கு அப்பாற்பட்டவை களைத் தியானத்தாலேயே அறிய முயலவேண்டும். காலம் இடம் காரண காரியம் என்னும் முக்கருவிகளால் அளந்தறியப்படாத சுத்த வுலகத்துப் பொருளை நிலவுலகத்து அளவைகளால் அளக்க 'வியலாதென்பதை உணர்தலே ஓர் ஞானமாகும். உயிர்க்குயிராயிருக்கும் பரம்பொருளைத் தோன்றி நின்றழியும் இவ்வுலகத்தில் உள்ளும் புறம்புமாகக் காண்டலே தத்துவ நூலாரின் நோக்கம். அக்கருத்துப்படவே திருமூல நாயனாரும்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்.

எனத் திருவாய் மலர்ந்தருளினர். யானையாகிய உருவத்தை நோக்குழி, மரம் சூனியமாதலும் மரமாகிய பொருளை நோக் குழி, யானையுருவம் சூனியமாதலும்போல் பரம்பொருளைப் பார்

முதற் பூதம் மறைப்பினும் உண்மை அறிவுடையர், பார்முதற் பூதம் பரம்பொருளில் ஒடுங்குவதை உணர்வர். காண்பானும் காட்சியும் (சேதனனும் அசேதனமும்) ஒன்றெனநிற்குமாகலான் அவ்வொற்றுமை நிலையில் ஓர் வேறுபட்ட நிலையை உணர்ந்து பரமஞானத்தைக் கடைப் பிடிக்க. இக் காரணம் பற்றியே அரிஸ்தாதிலும் உருவமின்றிப் பொருளில்லை; பொருளின்றி உருவமில்லை; உருவமும் பொருளும் ஒன்றனை ஒன்று பற்றி நிற்குமென்றார். ஈண்டு உருவமென்றது பூதப்பொருளின் உருவமன்று. நம் எண்ணங்கள் ஒவ்வொன்றுக்கும் உருவமும் பொருளும் உண்டென்பதை அறிக. ஒவ்வொரு எண்ணத்திலும் உருவமும் பொருளும் ஒன்றனை ஒன்று பற்றி நிற்குமாறு போல ஆன்மாவும் முதல்வனும் பெத்தத்திலும் முத்தியிலும் நிற்குநிலையை மெய்கண்டதேவர் “ அவையேயாய்த் தானேயாய் அவையேதானேயாய்” என்னும் தொடரால் இனிது விளக்கினார். பின்னர்

“ அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனுகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே”

என்னும் சூத்திரத்தால் பாசநீங்கச் சுத்தாத்துவிதமாய் நிற்குநிலையை நன்கு உணர்த்தினர். பிரபஞ்ச முழுவதிலும் முதல்வன் பெத்தத்திலும் முத்தியிலும் அத்துவிதமாய் நிற்பன் என்பது சித்தியார் திருவிருத்தத்தாலும் இனிது புலப்படும் “உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக, இலகுபேர் இச்சாஞானக் கிரியையுட் கரணமாக, நாடக நடிப்பன் நாதன்” தத்துவங்கடந்த வாக்கு மனுதீத கோசரப் பொருளாகிய கந்தழியை தத்துவங்களால் விளக்கும் தத்துவ நூலின் இயலை ஒருவாறு ஆராய்ந்தாம். இதுகாறும் கூறியவற்றால் தத்துவநூல் மெய்ப்பொருளின் பொருண்மை ஆராயும் நூல்என்பதும் அறிவுநூல் பொருண்மையை ஞாதிரு எங்ஙனம் அறிகின்ற தென்பதைத் தேர்கின்றதென்பதும் தத்துவ நூலுக்கும் உளநூல் ஒழுக்கநூல் அளவை நூல்களுக்குமுள்ள தொடர்புகள் இத்தன்மையவென்பதும் திறனுராயும் நூல்களே இயற்கை யாராய்ச்சிகளுக்கு ஆதாரமென்பதும் சமயநூல்கள் தத்துவக்கொள்கைகளை விளக்குந்தன்மைய வென்பதும் சமய நூல்களுக்குத் தத்துவநூல்களே ஆதாரமென்பதும் புலப்படும்.

Epistemology—அறிவுநூல் Geometry—வடிவக்கணிதம்
Metaphysics—தத்துவநூல் Acid—எரிநீர்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

### 28-ஆம் ஆண்டு விழா.

இச்சங்கத்தின் 28-ஆம் ஆண்டுவிழா நிகழும் பிரமாதி ஆண்டு ஆவணித் திங்கள் ௩, ௪, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் (19, 20—8—'39) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

இவ்விழாவிற்கென சங்கச்சூழல் முழுமையும் அழகுற அமைக்கப்பட்டிருந்தது. பல்வகைத் தோரணங்களாலும் விருந்தமைந்த செடி கொடிகளாலும் செம்மையாய் அணி செய்யப்பட்டிருந்த காட்சிகள் காண்போர் உளத்தை ஈர்க்குந் தன்மையிலிருந்தன. சங்க வாயிலில், வரவேற்புப் பொருள் பொதிந்த பொன்னுரைகள் பொறித்த தட்டிகள் அணியணியாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. நண்பகல் உணவிற்குப் பின்பு மக்கள் ஆயிரக்கணக்கில் இடங்கொள்ளாதவாறு வந்து நிறைந்திருந்தனர். கல்லூரி மாணவ, மாணவிகள் தலைவரவர்களை எதிர்கொண்டு வறவேற்பான்வேண்டி நிரல் நிரலாக நிறுத்தப் பட்டிருந்தனர். மணி மூன்றிற்கெல்லாம் தலைவரவர்கள் ஊர்தியில் வந்திறங்கினார்கள். வாழ்த்தொலி, ஏத்தொலி, முழக்கத்தினிடையே தமிழவேளவர்கள், விழாத்தலைவர், ஈழத்து அரசவை உறுப்பினரும், பரமேசுவரக் கல்லூரியின் முதல்வரும்

---

| | |
|---|---|
| Ethics—ஒழுக்கநூல் | Oxide—கறள் |
| Logic—அளவை நூல் | Botany—மாநூல் |
| Science—கலை | Horticulture—பயிர்நூல் |
| Natural Science—இயற்கையாரா[ய்ச்சி] | Zoology—விலங்கியல்நூல் |
| Chemistry—பொருணூல் [ய்ச்சி | Philosophy—ஞானநூல் |
| Economics—விலைநூல் | Evolutionists—விருத்திவாதிகள் |
| Physics—பௌதிகநூல் | Empirical Science—அநுபவநூல் |
| Anthropology—உயிர்நூல் | Emotion—மெய்ப்பாடு |
| Physiology—உடனூல் | Instincts—மூலசுபாவம் |
| Art—வித்தை | Grammar (definition)—இயல் [(இலக்கணம்) |
| Aesthetics—அழகியனூல் | |
| Normative science—திறனாராயும் [நூல் | Protective Instinct—சீவனோபாயம் |
| Algebra—எழுத்துக்கணிதம் | Sex Instinct—இணைவிழைச்சு |

சர். பொன்னம்பல இராமநாதன் அவர்களின் மருமகரும் ஆய, ஆனரபிள், சு. நடேசபிள்ளை, B.A. B.L., M.L.C., அவர்களை மலர்மாலை சூட்டி வரவேற்றார்கள். பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்தினை மாணவர் இன்னிசையுடன் பாடிக்கொண்டு செல்லத் தலைவரவர்கள் தமிழ்ப்பெருமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். தலைவரவர்களும் அவருடைய வாழ்க்கைத்துணையாய சிவகாமசுந்தரி அம்மையாரும், தேவி இராமநாதனும், தமிழ்ப் பெருமன்றமேடையில்அவர்களுக்கென அமைக்கப்பட்ட அழகிய இருக்கையில் அமர்ந்தனர். பெருமன்றத்தில் கூட்டங்கொள்ளாமையால் மக்கள் வெளியிலும் நின்றுகொண்டிருந்தனர். சரியாகக் கூட்டம் 3½-மணிக்குத் தொடக்கமாயிற்று. தமிழ்த்தாய் வாழ்த்திற்குப் பின்னர் விழாத் தலைவரவர்கள் ஈழத்தில் புரிந்துவருகிற பெரும்பணிகளைப் பாராட்டி, சங்கத்தின் சார்பாக அவர்கட்கு வாழ்த்துப்பா ஒன்று படித்துக் கொடுக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு சங்க அமைச்சர் திருவாளர். J. M. சோமசுந்தரம் பிள்ளை B.A. B.L., அவர்கள் சங்கத்தின் உசு, உஎ, உஅ-ஆம் ஆண்டுகளின் அறிக்கையைப் படித்தார்கள். பின்னர் ஆண்டுவிழாவைப் பாராட்டி, இனிது நடைபெற வேண்டி, அன்பர்களும் பெரியோர்களும் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை அமைச்சரவர்கள் படித்தார்கள். சங்க ஆண்டுவிழாவில் கலந்து கொள்வதற்கு விரைந்து வருவதாக, சுவாமி. விபுலாநந்த அடிகள் B. Sc. (London.) ஈழத்திலிருந்து அனுப்பியிருந்த தந்தியும், கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. பின்னர் நீண்ட கைத்தட்டலுக்கிடையே தலைவரவர்கள் எழுந்து தங்கள் முன்னுரையை நிகழ்த்துகையில்,

இக்கரந்தைத் தமிழ்ச் சங்கமே தமிழ்நாட்டில் சிறந்து மிளிர்கின்றதென்றும், இது தன்னொளியை வடவேங்கடம் தென்குமரிவரையுமன்றி, ஈழத்திலும் வீசுகிறதென்றும், தமிழ் நாட்டின் வரலாற்றையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் பிற்காலத்தில் எழுதப்புகும் ஆசிரியர்கள் இச்சங்கத்தின் தமிழ்த் தொண்டினைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துச் செல்வரென்றும், இச்சங்கம் இவ்வாறு மிளிர்ந்தோங்குவதற்கு உறுதுணையாயிருந்து பணியாற்றும் தமிழவேள், திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் பெரும் வைப்புநிதியாவார்களென்றும், இவர்களது அரிய உழைப்பே இதன் வளர்ச்சிக்குப் பெருந்துணை யென்றுங் குறிப்பிட்டுத் தமிழின் தனிப்பெருந் தன்மையினையும், தமிழ்க்

கலையின் உயர்வையும், தமிழர் வீரத்தையும் அவ்வீரஞ் சிறக்கத் துணைபுரிந்த தமிழாற்றலையுங் கூறித் தமிழ்முன்னோர்கள் புரிந்த அரும்பெருஞ் செயல்களை நினைவூட்டி நிற்பது இச்சங்கமென்பதையும், இச்சங்கத்தினைப் பல்லாற்றானும் ஓம்பவேண்டியது தமிழ்நாட்டினரது பெருங்கடமையென்பதையும் புலப்படுத்திச் சுமார் $1\frac{1}{2}$-மணிநேரம் அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் "தொல்காப்பியமும் சங்கநூல்களும்" என்னும் பொருள்பற்றி வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள் B. O. L. அரிய ஆராய்ச்சி விரிவுரை நிகழ்த்தினார்கள். இரண்டாவதாகக் "கலித்தொகை" என்னும் பொருள்பற்றிக் 'கரந்தைக்கவியரசு' தமிழ்ப்பேராசிரியர் R. வேங்கடாசலம் பிள்ளைஅவர்கள் அழகும் இனிமையும் கனிந்த அரும்பெரும் சொற்பொழிவொன்று நிகழ்த்தினார்கள். மூன்றாவதாகச் 'சிவஞானமுனிவர்' என்னும் பொருள்பற்றித் தமிழ்ப்பேராசிரியர், பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பொருள்பொதிந்த ஒளி நிரம்பிய இனிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் கல்லூரித் தலைமையாசிரியர் சிவ. குப்புசுவாமிப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட "கண்டீரக் கோப்பெருநள்ளி" என்ற அழகிய, வீரம் நிறைந்த, தமிழ் நாடகத்தைக் கல்லூரி மாணவர்கள் கண்டோர் உளமினிக்க, செவியினிக்க, கண்ணினிக்கக் கவினுற நடித்தனர். பின்னர் தலைவர் முடிவுரையுடன் முதனாள் நிகழ்ச்சிகள் இரவு 6-மணிக்குத் தமிழ்த்தாய் வணக்கத்துடன் இனிது நடந்தேறி முடிந்தன. கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் சுமார் 10 மணிக்கு சுவாமி. விபுலாநந்த அடிகள் இங்கு வந்துசேர்ந்தார்கள். அவர்கள் வருகை எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியை யளித்தது.

## இரண்டாம் நாள் நிகழ்ச்சி

ஞாயிற்றுக்கிழமை மாலை $3\frac{1}{2}$- மணிக்குத் தமிழ்த்தாய் வணக்கத்துடன் இரண்டாம்நாட் கூட்டம் தொடங்கப்பெற்றது. முதனாட் கூட்டத்தைவிட இரண்டாம்நாட் கூட்டம் இரண்டு மடங்கு மிக்கிருந்ததனால் சங்கத்தார் ஒலிபெருக்குங் கருவியமைத்து எல்லோரும் கேட்பதற்கான ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு முதலில் மாணவர்களுக்குப் பரிசுகள் தலைவரவர்களால் வழங்கப்பட்டன. தலைவர் முன்னுரைக்குப்பின், "பண்டைத்தமிழர் அரசியற் கருத்துக்கள்"

என்னும் பொருள்பற்றி திரு. ச. க. கோவிந்தசாமிப்பிள்ளை M. A. அவர்கள் ஆற்றொழுக்கென அழகிய நடையில் அரியதோர் சொற்பொழிவாற்றினார்கள். இரண்டாவதாக **வினையுணர்வும் ஞானசம்பந்தரும்** என்ற பொருள்பற்றி, வித்துவான், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் யாவர் மனமும் உருகுமாறு சுருக்கமும் விளக்கமுமாகச் சொற்பொழிவொன்றாற்றினார்கள்.

மூன்றாவதாக "**திருக்கயிலைக்காட்சி**" என்ற பொருள்பற்றிப் பேசப் போந்த **விபுலாநந்தஅடிகளார்** கயிலை செல்லும் வழி, சூழல் முதலியனவற்றைக் கரும்பலகையிற் படம் வரைந்து காட்டித் தாம் நேரிற் கண்டறிந்த காட்சிகளையும், சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்துப் புலப்படுத்திய திருக் கயிலைக்காட்சியையும் ஒன்றோடொன்று ஒத்து மேம்படுமாற்றை யும் தெளிவித்துக் கேட்போருள்ளம் திருவருளிற்றிளைத்து இறும்பூதெய்துமாறு ஒப்பிலாச் சொற்பொழிவாற்றி யருளி னார்கள்.

நான்காவதாக **குமரகுருபரர்** என்ற பொருள்பற்றிப் பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றென, தெவிட்டா வண்ணம் சீரிய செந்தமிழ் நடையில் அருமைசான்ற சொற்பொழிவொன்று ஆற்றினார்கள்.

பின்னர், தலைவரவர்கள் தம்முடிவுரையில்,

தமிழ்க் கலைகளை எல்லாந் திரட்டிப் புதுவதாக அளிப்பதே நல்விருந்தென்றும், வீரரேயன்றிப் பாவாணர்களும்வாகைபெறு தற்குரியரென்றும், அவ்வாறு புலவர்கள் வாகைசூடும் நாளே நல்விழாவாகுமென்றும், குறிப்பிட்டுத் தாய்மொழியை முதலிற் கற்றால் பிறகு எம்மொழிகளையும் எளிதிற் கற்றுக் கொள்ளலா மென்றும், தமிழைக் கற்றால் வாராதன இல்லையென்பதைக் குமரகுருபரர் வரலாறு உணர்த்துமென்றும் அதனால் தமிழர் தம்மொழியைச் சிறப்பாகப் பயின்றால் பின் எம்மொழியும் பயில இயலுமென்றும், இந்தி முதலிய மொழிகளை இளமை யிலேயே கற்றல்வேண்டுமென்ற நியதி விரும்பத்தக்கதல்ல வென்றும் கேட்போருள்ளத்துப் பசுமரத்தாணிபோற் பதியு மாறு எடுத்துக்காட்டித் தெருட்டினார்கள்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## உறுப்பினர் கூட்டம்

## (20—8—39)

இஃது இருபத்தெட்டாவது ஆண்டுவிழாவின் இரண்டாவது நாளாகிய ஆவணி, ச (20—8—39) ஞாயிறு, காலை மணி 8-க்குத் தமிழ்ப் பெருமன்றத்தின்கண் குழுமியது. சங்க உறுப்பினர்கள் ஒருங்கிருந்து சங்க வளர்ச்சிக்குரியவற்றை ஆய்ந்து முடிக்கவேண்டும் என்பதுபற்றியே இது கூட்டப்பெற்றது. அதற்கிசைந்து 45 உறுப்பினர்கள் வந்திருந்தனர். கூட்ட நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் தலைமை ஏற்றிருந்தார்கள்.

முதற்கண் சங்கத்தலைவர், தமிழவேள் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

நாம் தொடங்கிய பணிகளுள் புலவர் கல்லூரி மிகச் சிறந்ததொன்றாம். ஆண்டொன்றுக்கு ரூபா ஐயாயிரமாவது இதற்கு வேண்டும். இதன்கண்பயின்று புலவராகச் செல்பவர் ஆசிரியர் முதலிய பதவிகளைக் கருதாது தாம்தாமே பொருளீட்டி வாழ்வதற்குரிய ஏதேனும் ஒருதொழிலைக் கற்றவராதல் வேண்டும்.

இசை, இழி நிலையடைந்த இக்காலத்து அதன்பயன் உணர்ந்து பாடுவோரும் கேட்போரும் இலர். அவ்விசையினை வளர்த்தற்குரிய முறையினை நாம் மேற்கொள்ளவேண்டும்.

தமிழ்ச் சித்தவைத்தியம் மங்கிப்போகும் நிலையிலிருப்பதை அறிந்து இவண் பயிலும் மாணவர்கள் மருத்து நூல்களை நன்கு கற்று சிற்றூர்களில் வதிந்து பிணிநீக்குவாராயின் எத்துணையோ நன்மையுண்டாம்.

சிறந்த ஆராய்ச்சியும் நுண்ணுணர்வும் உடையாரால் எழுதப்படாத ஓவியம் எதுவும் நலம் பயவாது. அத்தகைய நலமிலா ஓவியமே இக்காலத்துப் பல்கியுள. அடியார்கள், கடவுளரின் வடிவங்கள் இயற்கைக்காட்சிகள் முதலியன ஓவியவடிவில் வருபவற்றை நோக்கின் இவ்வுண்மை புலனாம். இக்குறைபாட்டை நீக்குதற்பொருட்டுத் தமிழ்ப் புலவராவார் ஓவியக் கலையிற்றிறமை பெற்றால், தமிழ்நாட்டின் ஓவியச்சிறப்பை நாடு அடைதல் கூடும்.

தமிழ்ப்புலவர்களுள் வேலையில்லாது வாடுவோர் தொகை நாளும் மிகுகின்றது. இவர்கள் தங்கள் ஆற்றற்கேற்றவாறு ஒரு தொழிலைப் பயின்று பொருளீட்டி வாழ்வாராயின் அடிமையில்லாப் புலமை பெறுவர். இந்நோக்குடன் தொழிற்கூடம் ஒன்று இவண் நிறுவுதல்வேண்டும். பலர் சிறுதொகையினை முதலாகவைத்து, புழங்கும் பொருள்களைச் செய்து அவை கொண்டு கட்டிடம் முதலிய வேலைகளைச் செப்பமானமுறையில் செய்விக்கலாம். கட்டிடத் தொழிலில் தச்சு ஓவியம் முதலிய பலதொழில்களும் இடம் பெற்றுள்ளன. இங்கு பயிலும் மாணவர்கள் இவ்வாறு தொழிற்றிறங் கற்று வெளிச்செல்வராயின் உள்ளத் துலைவின்றி வாழலாம். இத்தகைய நோக்கங் கொண்டுதான் இக்கல்லூரி வேலைசெய்யவேண்டும்.

தமிழ் முடிவேந்தரும் வள்ளல்களும் இல்லாத இக்காலத்து அரசியலார் பாதுகாப்பு ஒன்றுகொண்டே ஒரு தொழிலும் இயற்ற இயலாது. உறுப்பினர் தரும் பொருளும் நல்லுரையும் தொண்டுகளுமே என்றும் நிலைநின்று நம் நோக்கங்களை நிறைவேற்றும் என்பது உறுதி.

சங்கத்தின் துணைகொண்டு தமிழ்ப்பொழில் தட்டுத் தடுமாறுகின்ற நிலையில் நடைபெற்று வருகின்றது. இதனைக் கற்றூர் விரும்பி வாங்குவதில்லை. இனியாவது உறுப்பினர்கள் இதனைப் போற்றி வாங்குதல்வேண்டும். சங்கத்திற்குக் குறைந்தது ஓர் ஆயிரம் உறுப்பினர்களாவது இருப்பின் பொழிலை விலையின்றி வழங்க இயலும்.

**பண்டிதமணி** அவர்கள் பேசியதாவது :—

உறுப்பினருள் இளைஞர்கள் நாடகப் பயிற்சியாலும் சங்கத்திற்குப் பொருள்தேடலாம் எனக் கூறினர்

**திருவாளர் நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்** பேசியதாவது :—

நுண்ணுணர்வின்மை வறுமை. அவ்வறுமை நமக்கில்லை. கொடுமுடி போன்ற நம் புலவர்கள் நாம் அணுகும் நிலையில் இல்லை. அவர்கள் அறிவுரைகளைத் தமிழ்பொழிலுக்கு அனுப்ப வேண்டும். தமிழ்ப்பெரும்புலவர் பலருடைய கட்டுரைகள் தமிழ்ப்பொழிலில் வெளிவருமாயின் அதனை வாங்குவோர் பலராவர். புலவர் வாழ்க்கையே இந்நாட்டில் வேண்டற்பாலது. இக்காலத்துப் புலவர்கள் அவ்வாழ்க்கையை விரும்புவதில்லை. தம்பக்கத்துள்ளார்க்குப் புலமையில் விருப்பம் உண்டாக்குபவரே புலவராவர். **பண்டிதமணி** அவர்கள் திருவாசகத்திற்கு

உரை வரைந்தால் அது பேருதவியாகும். **செயத்தக்க செய்யாமையானுங் கேடும்;** ஆதலால் தமிழ்ப்புலவர் தம்மால்இயன்றவற்றைச் செய்துமுடித்தலில் முற்படவேண்டும். பல துறைகளிலும் உள்ளவர்கள் புலமை யடையவேண்டும். சங்கத்தின்மாட்டு அன்புடையவர், தாம் செல்லுமிடங்களி லெல்லாம் **தமிழ்ச்சுவை, தமிழர்கடமை** ஆகியவற்றை எடுத்துரைத்தும், சங்கத்தின் ஆக்கம் வளர்வதற்கான தொண்டுகளை முக்கரணங்களாலும் செய்துபோற்றவேண்டும் எனக்குறிப்பிட்டார்கள். மற்றும்பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர்க் கீழ்க்கண்ட முடிபுகள் நிறைவேற்றப் பட்டன.

1. உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது ஒவ்வொருவரையாவது உறுப்பினராகச் சேர்த்தல் வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படும் உறுப்பினர்களும் உறுதியுள்ளவராதல் வேண்டும்.

2. ஒவ்வொரு திங்களிலும் உறுப்பினர்கள் சங்கத்திற்குச் செய்தனவும் செய்ய வேண்டுவனவுமாகியவற்றைத் **தமிழ்ப் பொழிலில்** வெளியிட்டு அவர்களை ஊக்குதல் வேண்டும்.

3. **தஞ்சை, மாநாட்டாண்மைக் கழகத்தாரைப்** போன்று, ஏனைய தமிழ்நாட்டு மாநாட்டாண்மைக் கழகத்தாரும் தமிழ்ப் பொழிலை வாங்கிப் போற்றுதல் வேண்டும்.

4. தமிழ்ப்புலவராவார் ஒவ்வொருவரும் உறுப்பினராகச் சேர்ந்தோ அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா ஒன்றுவது நன்கொடை உதவியோ சங்கத்தைப் புரத்தல் வேண்டும்.

5. தமிழ்ப் பெரும்புலவர் ஆவார் பலதுறைபற்றிய கட்டுரைகளைத் தமிழ்ப் பொழிலுக்கென வரைந்து உதவுதல் வேண்டும்.

திக்கற்ற மாணவர் இல்லம் :—

கருந்திட்டைக்குடியிலிருக்கும் திருவாளர், வீ. சு. சிதம்பரம்பிள்ளை அவர்களின் திருமகளும், பம்பாய்நகரில் மின்பொறிவலாளராயிருக்கும் திரு T. K. தியாகராயப்பிள்ளை அவர்களின் மனைவியாருமாய செல்வி காமாட்சியம்மை 27-ஆம் வயதில் 1938-சூலை மாதம் உவாமதியன்று உலக வாழ்க்கையை நீத்தனர். இவ்வம்மையார் பெண்மைநலங்களும், நிறை குண்ணும் உடையராயிருந்து, மனையறம் புரிந்தவர். அன்பும் அருட்குண மும் நிறைந்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொண்டுகளில் ஆர்வ முடையவர். ஆதித்த குருநாதரை மனவுறுதியுடன் வழிபடுபவர். இத் தகைய பெற்றிமைகள் நிறைந்த அம்மையாரின் தலைத்திதி நாளில் (30-சூலை 1939) அன்னவர் நினைவின் பொருட்டு ரூபா இரண்டாயிரம் வைப்புநிதியாக திக்கற்றமாணவரில்லத்திற்குத் தருவதாக திரு. த. வே. உ. அவர்கள் அறமுறி எழுதி அனுப்பினர். அதனுடன் ரூ 1000 தரப் பெற்றது. 7—8—39 தேதியில் ரூ. 700 தரப்பெற்றது. எஞ்சிய தொகை ரூ. 300ஐ-யும் பின்னர் தருவதாக உறுதி கூறப்பெற்றுளது. இந்த முதற் பொருளின் வருவாய் இச்சங்கத்தின் திக்கற்ற மாணவரில்லத்திற்குப் பயன் படச்செய்தது சிறந்த அறச்செயலெனக் கருதப்பெறுகின்றது.

## மதிப்புரை

அன்பின் அற்புதம் : பக்தி பரவசம் :—இவ்விரண்டு நூல்களும், திருவாளர், சுத்தானந்த பாரதியார் அவர்களால் இயற்றப் பெற்றவை. முன்னது நாடகநூல் ; பின்னது, இசைநூல். 'திருநாவுக்கரசர்' அவர் களின் வாழ்க்கையின் அருளிச்செயல்களையும், விழுப்பயன் நல்கிவரும் வாழ்க்கைச் சிறப்பையும் காண்டற் கினிதாய், கற்றற் கெளியதாய் எழுதிய தமிழ்நூல்.

'பக்தி பரவசம்' என்பது அடிகள் இன்னிசையில் பாடிப் பரமனை வழிபட்ட பாடல்கள் அடங்கியது.

இத்தகைய நூல்களை நல்லமுறையில் அச்சிட்டு, தமிழ் மக்கள் கற்றுத் தெளிவுறுமாறு வெளியிட்டுவரும் அன்புநிலையத்தின் (இராமச்சந்திர புரம்—திருச்சிராப்பள்ளி) தமிழ்த்தொண்டு மிகவும் பாராட்டற்பாலது.

சக்தி :—இது பிரமாதி ஆவணித்திங்களில் வெளிவரத் தொடங்கி யுள்ள தமிழ்த்திங்கள் வெளியீடு. உயர்ந்த தாளில், விரிந்த அளவில், கவினுற அச்சிடப் பெற்றுளது. இதன் ஆண்டுவரி உள்நாட்டிற்கு ரூ. 3—8—0.

இற்றைநாளில் வலம்பெற்றிருக்கும் அரசியற் கட்சியினரின் கொள்கைகளில் உறைப்புடையோரால், இவ்வெளியீடு நடைபெறுவதாய்த் தோன்றினும் தமிழின்மொழித்திறனையும், தமிழ்ப் பெருமக்களின் ஒப்புயர்

வற்ற நாகரிகப் பண்புகளையும் கொற்ற மாதியவற்றையும் போற்றி வளர்க்கும் கருத்துடையதெனத் தெரிகின்றது.

இத்தாளின் நோக்கத்தை இதன் பெயர் குறிப்பதாகுமெனில், குடி மக்களின் கலையறிவு, பொருளாக்கம், வினைத்திட்பம், துணிபுடைமை, உடலுறுதி ஆதிய பெற்றிமைகள் வளரவும் சிறக்கவும் பணிபுரியுமென்றும், மக்களின் தன்னுரிமை உணர்ச்சியைத் தகைந்து, அடக்குமுறைகளால் குடிகளின் வலிகளைக் குன்றச்செய்யும், கொடுங்கோன்மையையும், குடிகொன்றிறைகொள்ளும் தீச்செயலையும் அகற்றி அரசியல் அறநெறி பிறழாதிருக்கச் செய்யுமென்றும் எண்ணுகின்றோம்.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு நன்கொடை உதவிய அன்பர்கள்

### வெகுதானிய தை முதல் பிரமாதி ஆடி முடிய

| திருவாளர்கள், | ரூ | அ | பை |
|---|---|---|---|
| நா. வெ. வரதராசலு நாயுடு கரந்தை | 30 | 0 | 0 |
| க. நல்லமுத்து நாட்டார் கள்ளப்பிரம்பூர் | 14 | 0 | 0 |
| சந்திரகாச நாட்டார் கரந்தை | 12 | 0 | 0 |
| அ. ப. கோவிந்தசாமி பிள்ளை கரந்தை | 12 | 0 | 0 |
| சனகுமார முதலியார் கரந்தை | 5 | 0 | 0 |
| கு. வேலுசாமி களிமேடு | 0 | 10 | 0 |

### புலவர் கல்லூரிக்கு நன்கொடை
(பிரமாதி ஆடி)

| | | | |
|---|---|---|---|
| திரு. K. தியாகராச பிள்ளை B.A., பம்பாய் (தமது மனைவியார் ஆண்டுநினைவுக்கு) | 10 | 0 | 0 |

---

### மின்னொளிக்கு நன்கொடை

| | | | |
|---|---|---|---|
| C. வேதாசலம் பிள்ளை B.A., B.L. மதுரை | 7 | 0 | 0 |
| J. M. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L. தஞ்சை | 3 | 0 | 0 |
| கோ. வான்மீகநாதன் B.A., திருச்சிராப்பள்ளி | 2 | 0 | 0 |
| T. M. தயாபரமூர்த்தி முதலியார் B.A., குண்டூர் | 4 | 0 | 0 |
| D. தங்கவேலு முதலியார் திருப்பூந்துருத்தி | 5 | 4 | 0 |
| மு. கதிரேசஞ் செட்டியார் அண்ணுமலைநகர் | 3 | 0 | 0 |
| ம. பாலசுப்பிரமணிய முதலியார் B.A., B.L. சென்னை | 3 | 0 | 0 |
| பழ. சாமிநாதன் செட்டியார் மேலைச்சிவபுரி | 5 | 0 | 0 |
| "ஒருநண்பர்" வலிவலம் | 2 | 0 | 0 |
| K. தியாகராச பிள்ளை B. A. பம்பாய் | 30 | 15 | 0 |

## திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு நன்கொடை

(வெகுதானிய தை முதல் பிரமாதி ஆடி முடிய)

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A., B.L. (காமாட்சியம்மை நிலைத்தநிதி) | 1700 | 0 | 0 |
| ,, நன்கொடை | 3 | 0 | 0 |
| அரசியலார் நன்கொடை | 282 | 0 | 0 |
| T. இராதாகிருட்டின நாயுடு B.A., B.L. தஞ்சை | 50 | 0 | 0 |
| C. வேதாசலம் பிள்ளை B.A., B.L. மதுரை (தாயார் ஆண்டுநிறைவு) | 50 | 0 | 0 |
| நா. கந்தசாமி பிள்ளை (EX. ENG.) தஞ்சை | 49 | 4 | 11 |

## திக்கற்ற மாணவர் இல்லத்திற்கு நெல் உதவிய அன்பர்கள்

| | க | ம |
|---|---|---|
| T.S. நந்திகேசுவரம்பிள்ளை கணபதிநகர் | 40 | 0 |
| கு. இராமசாமி பிள்ளை கரந்தை | 20 | 0 |
| இராசராசேசுவரியம்மை தஞ்சை | 10 | 0 |
| ஆண்டியப்பக்கோனூர் தஞ்சை | 5 | 0 |
| தில்லைக்கண்ணம்மை மகர்நோம்புச்சாவடி | 10 | 0 |
| குழந்தைவேல் பிள்ளை மகர்நோம்புச்சாவடி | 2 | 0 |
| R. நாராயணசாமி நாயுடு கீழவாயில் | 1 | 6 |
| ஐ. கு. துரைராச பிள்ளை பள்ளியகரம் | 10 | 0 |
| பொ. சொ. வீரபத்திர பிள்ளை கூடலூர் | 3 | 0 |
| K. நல்லமுத்து நாட்டார் கள்ளப்பிரம்பூர் | 15 | 0 |
| M. தண்டாயுதபாணி நாட்டார் கள்ளப்பிரம்பூர் | 5 | 0 |
| பாலசுப்பிரமணிய நாட்டார் கள்ளப்பிரம்பூர் | 5 | 0 |
| R. பாலகுரு நாட்டார் கள்ளப்பிரம்பூர் | 3 | 0 |
| கள்ளப்பிரம்பூர் கிராமத்தார் | 1 | 0 |
| ஆலங்குடி கிராமத்தார் | 3 | 0 |

தமிழ்ப்பொழில் சேர்க்கை.

# சென்னை கவர்ன்மெண்ட்.

## ரேவினியு டிபார்ட்மெண்ட்.

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 53-ம் நெ. அறிக்கை.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1939-ம் ஞு ஜூன் மீ 14 உ.

(சென்னபட்டணம் 1939-ம் ஞுத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரிவிதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம் ஞுத்திய சென்னபட்டணத்து ஆக்ட்.

சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அடியிற்கண்ட அறிக்கை விளம்பரமந்திரி இலாகாதாரால் வெளிவிடப்பட்டிருக்கிறது:—

புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம் ஞுத்திய சென்னபட்டணத்து ஆக்டானது சமீபத்தில் சட்டமாய் விட்டிருக்கிறது. கலெக்டரால் கொடுக்கப்படும் ஒரு லைஸென்ஸின் படிக்கன்றி மற்றப்படி, எந்த நபரும் தயார்செய்யப்பட்ட யாதொரு புகையிலையைச் சில்லறையில் விற்கக்கூடாதென்றும், எந்த ரூபத்திலாகிலுமுள்ள புகையிலையை மொத்தமாய் விற்கக்கூடாதென்றும், மற்றப்படி புகையிலையில் மொத்த வியாபாரியாகவோ தயார் செய்பவராகவோ தரகராகவோ கமிஷன் ஏஜெண்டாகவோ தொழில் நடத்தக்கூடாதென்றும் ஷை சட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கிறது. யாதொரு க்ளப் தன் மெம்பர்களுக்கும் யாதொரு ஹொடேல் தன் விருந்தாளிகளுக்கு அல்லது அதில் வாலாயமாய் வருபவர்களுக்கும் புகையிலை சர்பராசெய்வதும், தயார்செய்யும் யாதொரு நபர் தம்மால் தயார் செய்யப்பட்ட புகையிலையை (மொத்தமாகவோ சில்லறையாகவோ) விற்பனைசெய்வதும் ஷை ஆக்டின் காரியங்களுக்காக "விற்பனைகள்" ஆகும்.

2. புகையிலை பயிர்செய்யும் யாதொரு நபர் தாம் பயிர்செய்த அல்லது இலையாக விற்பதற்காகத் தாம் பயிர்செய்து பக்குவப்படுத்தின யாதொரு புகையிலையை லைஸென்ஸ் அல்லது நிர்ப்பந்தமில்லாமல் இலை ரூபத்தில் விற்பனை செய்யலாம்.

3. "புகையிலை" என்பதில், தயார்செய்யப்பட்ட புகையிலை என்பதும், பக்குவப்படுத்தப்பட்டதும், பக்குவப்படுத்தப்படாததுமான புகையிலை என்பதும், புகையிலையிலிருந்து தயார்செய்த அல்லது புகையிலை கலந்த யாதொரு வஸ்து என்பதும், புகையிலைச் செடியின் இலை என்பதும் அடங்கும். "தயார் செய்யப்பட்ட புகையிலை" என்பது ஸிகார், சுருட்டு, ஸிகரெட், ஸிகரெட் புகையிலை, சுங்கான் புகையிலை, பீடி, பொடி என்று அர்த்தமாகும்; ஆனால் அதில், போட்டுக்கொள்ளும் புகையிலையாவது, தயார்செய்வதற்கான பின்னுமொரு வேலை முறைக்கு உட்படுத்தும் உத்தேசத்துடன் புகையிலையிலிருந்து தயார்செய்த அல்லது புகையிலை கலந்த யாதொரு வஸ்துவாவது அடங்காது.

4 (1) தயார்செய்யப்படாத புகையிலையில் மொத்த வியாபாரம் செய்பவர்களுக்கும்,

(2) தயார்செய்யப்பட்ட புகையிலையில் மொத்த வியாபாரம் செய்பவர்களுக்கும்,

(3) தயார் செய்பவர்களுக்கும்,

(4) சில்லறை வியாபாரிகளுக்கும்,

(5) தரகர்கள் அல்லது கமிஷன் ஏஜென்டுகளுக்கும்,

தனித்தனியாய் லைஸென்ஸுகள் கொடுக்கப்படும். ஒரே நபராவது பர்ம் என்னும் வர்த்தகக் கூட்டத்தாராவது கம்பெனியாராவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறைமைகளில் தொழில் நடத்தினால், ஒவ்வொரு முறைமை விஷயமாகவும் பிரத்தியேகமாய் லைஸென்ஸ் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், தயார்செய்பவருடைய லைஸென்ஸானது தயார் செய்யப்பட்ட புகையிலையை மொத்தமாய் விற்பனை செய்வதற்கும் பிரயோகப்படும்.

சில்லறை வியாபாரிக்குரிய லைஸென்ஸ் கொடுப்பதற்காகக் கட்டணம் எதுவும் வாங்கப்படமாட்டாது. ஆனால், ஒவ்வொரு சில்லறை வியாபாரியும் தயார்செய்யப்பட்ட புகையிலையைத் தாம் சில்லறையில் விற்பனை செய்ததனால் கிடைத்த மொத்தத் தொகையின்மேல் A அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களின்படி ஒரு வரி செலுத்தவேண்டும்.

5. ஒவ்வொரு மொத்த வியாபாரியும் தயார்செய்யப்பட்ட புகையிலையைத் தாம் மொத்தமாய் விற்பனைசெய்ததனால் கிடைத்த மொத்தத் தொகையின்மேல் 2 சத வீதமுள்ள ஒரு வரி செலுத்தவேண்டும். ஆனால், மொத்தவியாபாரிகளுக்குச் சர்பராசெய்வதற்காக ஒரு வருஷத்தில் 1,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ள தயார்செய்யப்பட்ட புகையிலையைத் தயாரிக்கும் யாதொரு நபர் மொத்த விற்பனைத் தொகைக்குரிய இந்த வரியைச் செலுத்தவேண்டியதில்லை. தயார்செய்யப்படாத புகையிலையைச் சில்லறையிலோ மொத்தமாகவோ விற்பனை செய்வது விஷயமாய் மொத்த விற்பனைத் தொகைக்குரிய வரி எதுவும் விதிக்கப்படத்தக்கதாகமாட்டாது.

6. B அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களின்படி வருஷாந்தரக்கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேல், மொத்த வியாபாரிகளுக்கும் தயார் செய்பவர்களுக்கும் தரகர்களுக்கும் கமிஷன் ஏஜென்டுகளுக்குமுரிய லைஸென்ஸுகள் கொடுக்கப்படும். தங்களுடைய மொத்த விற்பனைகளின்மேல் மொத்த விற்பனைத் தொகைக்குரிய வரி செலுத்துபவர்களின் விஷயத்தில், ஒரு லைஸென்ஸுக்கான கட்டணமானது B அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்துக்குப் பதிலாக 10 ரூபாயாகக் குறைக்கப்படும்.

7. எந்த விதமாகவாகிலும் புகையிலையை உபயோகிப்பதை ஷை சட்டத்தில் வரையறுத்திருக்கவில்லை. ஆனால் சொந்த உபயோகத்துக்காக ஏதாவதொரு காலத்தில் லைஸென்ஸில்லாமல் இவ்வளவு வரையில்தான் ஒருவர் வைத்துக்கொண்டிருக்கலாமென்பதை நிர்ணயிக்க ஷை ஆக்டில் கவர்ன்மென்டாருக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறது.

8. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளையாவது தொழில் நடத்துமிடங்களையாவது உடைய யாதொரு லைஸென்ஸ்தாரர் அப்படிப்பட்ட ஒவ்வொரு

கடைக்காகவும் அல்லது தொழில் இடத்துக்காகவும் பிரத்தியேகமாய் ஒரு லைஸென்ஸ் பெற்றுக்கொள்ளவேண்டும்.

9. கணக்குப் புஸ்தகங்கள் வைத்துவரும்படியும், இதுகாரியத்துக்காக நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனுக்களின்படி நிஷ்கரிஷையான காலத்துக்கொருமுறை ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளை அனுப்பும்படியும் ஒவ்வொரு லைஸென்ஸ்தாரருக்கும் உத்தரவு செய்யலாம்.

10. எவராகிலும் இந்தச் சட்டத்திலே புகையிலையை விற்பனை செய்வதற்கான லைஸென்ஸ்களுக்கும் மொத்த விற்பனைத் தொகைக்குரிய வரியைச் செலுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளில் எதையாகிலும் மீறிநடந்தால், அவருக்கு 1,000 ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனையும், அந்தப்படித் தொடர்ச்சியாய் மீறி நடந்து கொண்டே வரும்பட்சத்தில், முதல் தினத்துக்குப் பிறகு அந்தப்படித் தொடர்ச்சியாய் மீறி நடந்து கொண்டேவரும் ஒவ்வொரு தினத்துக்கும் 50 ரூபாய்க்கு மேற்படாத பின்னுமொரு அபராத தண்டனையும் விதிக்கப்படத்தக்கதாகும். யாதொரு புகையிலை உத்தியோகஸ்தர் தம்முடைய அதிகாரங்களைச் செலுத்தும்போதாவது கடமைகளை நிறைவேற்றும்போதாவது அவரைஎவராகிலும் வேண்டுமென்றே தடைசெய்தால், அவர் மூன்று மாதத்துக்கு மேற்படாத காவல் தண்டனையாகிலும் 500 ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனையாகிலும்இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படுவதற்குள்ளாவார். இந்தச்சட்டத்துக்கு விரோதமான எந்தக் குற்றத்தையாகிலும் செய்பவர்களை ஜாமீன் பேரில் விடுதலை செய்யலாம்.

11. மொத்த விற்பனைத் தொகையை நிச்சயிக்கவேண்டிய விதத்தையும், வரியை விதித்து வசூலிக்க வேண்டிய விதத்தையும், கலெக்டர்கள், புகையிலை உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் அதிகாரங்களையும் கடமைகளையும், அவர்கள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையையும் நிர்ணயிப்பதற்காகவும், இந்தச் சட்டத்தைப் பரிபாலனம் செய்வதற்காகப் பொதுவாய் ஏற்பாடுசெய்வதற்காகவும், சீக்கிரம் விதிகள் பிறப்பிக்கப்படும்.

விளம்பரங்கள்கூடப் பிரசித்தம் செய்யப்படும். இந்தச் சட்டத்தின்படி கலெக்டர்களுக்குள்ள வெவ்வேறு கடமைகளை இன்ன வகுப்புகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் செய்வார்களென்று அந்த விளம்பரங்களில் அறிவிக்கப்படும். லைஸென்ஸுகளை இன்ன விதமாய்ப் பெறவேண்டுமென்பதைக் குறித்தும் ஷை விளம்பரங்களில் சொல்லப்பட்டிருக்கும்.

## A. அனுபந்தம்.

**தயார் செய்யப்பட்ட புகையிலையில் செய்யப்படும் சில்லறை விற்பனைகளின் மொத்த தொகையின்மேல் விதிக்கப்படும் வரியின் வீதங்கள்.**

| | |
|---|---|
| (a) மொத்த விற்பனைத் தொகை இருநூறு ரூபாய்க்கு மேற்பட்டால், | வருஷ மொன்றுக்கு ஆறு ரூபாய் |
| (b) மொத்தவிற்பனைத் தொகை இருநூறு ரூபாய்க்குமேற்பட்டும் நானூறு ரூபாய்க்கு மேற்படாமலுமிருந்தால், | வருஷ மொன்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் |

(c) மொத்த விற்பனைத் தொகை நானூறு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால்,

வருஷ மொன்றுக்கு ஷெ மொத்த விற்பனைத்தொகையின் முதல் நானூறு ரூபாயில் நூற்றுக்கு மூன்று வீதமும், அந்த மொத்த விற்பனைத் தொகையின் மீதி பாகத்தில் நூற்றுக்குப் பத்து வீதமும்.

## B. அனுபந்தம்.

### 5 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள்.

(i) பக்குவப் படுத்தப்பட்ட அல்லது பக்குவப் படுத்தப்படாதபுகையிலை யிலாவது புகையிலையிலிருந்து தயார்செய்தஅல்லது அந்தப் புகையிலைகலந்த (தயார் செய்யப்பட்ட புகையிலையாயிராத) யாதொரு வஸ்துவிலாவதுவியா பாரம் செய்வதற்காக அல்லது தயார் செய்யப்பட்ட புகையிலையாக அதை மாற்றுவதற்காக அதை விற்கும் அல்லது வாங்கும் யாதொரு மொத்த வியா பாரி ... ... நூறுரூபாய். ஆனல் கலெக்டரானவர்—

(a) சிறிய அளவில் வியாபாரம் செய்யும் யாதொரு நபருடைய மொத்த விற்பனைத்தொகை வருஷமொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறைவாயிருக் கின்றதென்று மதிப்பிடப்பட்டால்,

வருஷ மொன்றுக்கு ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தப்படுவதன் மேலும்,

(b) அவருடைய மொத்த விற்பனைத் தொகை ஆயிரம் ரூபாயாகவும் அல்லது அதற்குமேற்பட்டும் மூவாயிரம் ரூபாய்க்குக் குறைவாகவும் இருக் கிறதென்று மதிப்பிடப்பட்டால், அவருக்கு ஒருலைஸென்ஸ் கொடுக்கலாம், வருஷ மொன்றுக்குப் பத்து ரூபாய்கட்டணம் செலுத்தப்படுவதன் மேலும்,

(ii) அடியிற்கண்ட (iii) பாபத்தின் வியாபகத்துக்குட்பட்டதயார் செய் பவராயிராத வேறே யாதொரு மொத்த வியாபாரி. ... ஐம்பது ரூபாய்.

(iii) (a) தயார்செய்யும் எந்த நபருடைய வளவுக்குத் தொழிற் சாலை களைக் குறித்த 1939-ம்ஞூத்திய ஆக்ட் பிரயோகப் படுவதாயிருந்து அல்லது அதற்கு வியாபிக்கும்படிச் செய்யப்பட்டிருந்து, 200 வேலையாள் களாவது அதற்கு மேற்பட்ட வேலையாள்களாவது அவருடைய வளவில் வேலை செய்துகொண்டிருக் கிறார்களோ அல்லது முந்திய பன்னிரண்டு மாதங்களில் எந்த தினத்திலாகிலும் அதில் வேலைசெய்து கொண்டிருந்தார் களோ அப்படிப்பட்ட யாதொரு நபர். ... நூறு ரூபாய்

(b) தயார்செய்யும் வேறே எந்த நபருடைய வளவுக்குத் தொழிற்சாலை களைக் குறித்த 1939-ம்ஞூத்திய ஆக்ட் பிரயோகப்படுகிறதோ அல்லது அதற்கு வியாபிக்கும்படிச் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர். ... ஐம்பது ரூபாய்.

(c) தயார்செய்யும் எந்த நபருடைய வளவுக்குத் தொழிற் சாலைகளைக் குறித்த 1934-ம்ஞூத்திய ஆக்ட் பிரயோகப்படாமலிருந்து அதற்கு வியா பிக்கும்படிச் செய்யப்படவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு நபர். ... ... இரண்டு ரூபாய்.

(iv) யாதொரு தரகர் அல்லது கமிஷன் ஏஜென்ட் ஐம்பது ரூபாய்.